ASK Kopi Kakis
GOVERNMENT POLICIES MADE SIMPLE

People's Association

விவரங்கள் ஆகக்கடைசியாக
31 ஜூலை 2023 புதுப்பிக்கப்பட்டன

# என் குடும்பத்தைப் பராமரிக்கிறேன்



# வாழ்க்கைப் பயணத்தை மேம்படுத்துவோம்

நீங்கள் வாழ்க்கையின் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், சரியான ஆதரவும் உதவியும் கிடைத்தால் வாழ்க்கைப்பயணம் சுமுகமாக அமையும். திருமணம் செய்தல், குடும்பத்தைத் தொடங்குதல், வயதான பெற்றோர்களைப் பராமரித்தல், புதிய வேலை தேடுதல் அல்லது ஓய்வுக்காலத்திற்குத் திட்டமிடுதல் உள்ளிட்ட வாழ்க்கையின் அனைத்து கட்டங்களுக்கும் இது பொருந்தும்.

இந்த மின்-கையேடுகள் தொடரில், சுகாதாரப் பராமரிப்பு, குடியிருப்பு, வாழ்நாள் கற்றலும் வாழ்வாதாரமும் கல்வி போன்ற வாழ்க்கை விவகாரங்கள் தொடர்பான அரசாங்கக் கொள்கைகள், திட்டங்கள் பற்றிய மேலோட்டமான விவரங்களையும் குறிப்புகளையும் நீங்கள் காணலாம். வாழ்க்கையின் அடுத்த கட்டத்தைத் தொடங்கவும், எதிர்பாராத சவால்களைச் சமாளிக்கவும், முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் பொருத்தமான வாய்ப்புகளைக் கண்டறியவும் நீங்கள் நன்கு விவரமறிந்திருக்க இந்தத் தொடர் துணை புரியும்.

இந்தத் தொடரில் மூன்று மின்-கையேடுகள் உள்ளன::

என் குடும்பத்தைப் பராமரித்திடலாம்
என் வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றம் அடைந்திடலாம்
நம் மூத்தோரைப் பராமரிக்கிறோம்

**AKK மின்-கையேடுகள் அண்மைப் பதிப்பை மக்கள் கழகத்தின் go.gov.sg/akkbooklets இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யுங்கள்!**

## காப்பி காக்கிகளிடம் கேளுங்கள்!

கென்னும் அவனது காக்கிகளும்* அன்பான புன்சிரிப்புக்கும் கலகலப்பான பேச்சுக்கும் அக்கம்பக்கம் முழுவதும் நன்கு அறியப்பட்டவர்கள். கென் அண்மை நடப்புகள் பற்றி அனைவருக்கும் உடனுக்குடன் தகவல் அளிப்பார். உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால், அவரிடம் சென்றால் போதும். அவர் நம்பகமானவர். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் தொடங்குவதற்கு உதவும் பயன்மிக்க தகவலையும் அறிவுரையையும் பெறுவதற்கான குறிப்புகளும் தொடர்புகளும் அவருக்குத் தெரியும். உங்களுக்குப் பயனளிக்கக்கூடிய அரசாங்கத் திட்டங்கள் பற்றியும் அவர் சுருக்கமாகவும் எளிமையாகவும் பகிர்ந்து கொள்வார்!




எல்லோரையும் போல, கென்னும் வாழ்க்கையில் சில பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறார். ஆனால், அவரது நம்பிக்கைக்குரிய காக்கிகளைப் போல, பல உதவும் கரங்கள் இருப்பதை அனுபவத்தின்மூலம் அவர் தெரிந்து கொண்டார். எங்கு சென்று, யாரிடம் கேட்பது என்பதை நீங்கள் தெரிந்து கொண்டாலே போதும். எனவே, உங்களுக்கு உதவியும் ஆதரவும் தேவைப்பட்டால், கென் அல்லது அவரது காக்கிகளிடம் கேளுங்கள்!

**காக்கிகள் - நல்ல நண்பர்களைக் குறிக்கும் பேச்சுவழக்குச் சொல்*

# ஒவ்வொரு கட்டத்திலும், உங்களுக்குத் துணையாக நிற்கிறோம்


## 1 நிதிச்சுமை இன்றி உங்கள் வீட்டைப் பெற்றிடுங்கள் Pg 4 - 8

- புதிய வீட்டுரிமையாளர்களுக்கான முன்னுரிமைத் திட்டங்கள்
- முதல்முறையாக வீடு வாங்குவோருக்கான மானியங்கள்
- இரண்டாவது முறையாக வீடு வாங்குவோருக்கான மானியங்கள்

## 2 அதிக கவலைகளின்றி குடும்பத்தைத் தொடங்குங்கள் Pg 9 - 11

- மெடிசேவ் பிரசவ உதவித் திட்டம்
- கருத்தரிக்க உதவும் சிகிச்சைகளுக்கு மெடிசேவ்

## 3 நம் பிள்ளைகளுக்குச் சிறந்த வாழ்வை அளித்திடுவோம் Pg 12 - 24

- பிறப்பிலிருந்து மெடிஷீல்டு லைஃப் பாதுகாப்பு
- குழந்தைப் பராமரிப்பு, கைக்குழந்தைப் பராமரிப்பு மானியங்கள்
- எடுசேவ் கல்விச்சேமிப்பு

## 4 உங்களது வாழ்க்கைச் செலவுகளுக்கு உதவி பெறுங்கள் Pg 25 - 32

- பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு
- சமூக சுகாதார உதவித் திட்டம்
- கொம்கேர்

## 5 இயலாமை உள்ள பெரியவர்களுக்கு ஆதரவு Pg 33 - 37

- இல்லம் சார்ந்த பராமரிப்புச் சேவைகள்
- கேர்ஷீல்டு லைஃப்
- மெடிசேவ் கேர்

## 6 கூடுதல் ஆதரவை அனுபவிக்கலாம் Pg 38 - 41

- பெற்றோர் நிவாரணம் / தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / வாழ்க்கைத்துணை நிவாரணம்
- வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி நிவாரணம்
- பராமரிப்பளிக்கும் தாத்தா பாட்டியர் நிவாரணம்




# நிதிச்சுமை இன்றி உங்கள் வீட்டைப் பெற்றிடுங்கள்

# Pg 4 - 8



இப்பகுதியில் உள்ள ஆதரவுத் திட்டங்களுடன் உங்கள் வாழ்நாளுக்கான இல்லத்தை அமைத்திடுங்கள்:

- புதிய வீட்டுரிமையாளர்களுக்கான முன்னுரிமைத் திட்டங்கள்
- முதல்முறையாக வீடு வாங்குவோருக்கான மானியங்கள்
- இரண்டாவது முறையாக வீடு வாங்குவோருக்கான மானியங்கள்



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# மகிழ்வளிக்கும் இல்லம்

*நிதிச்சுமை இன்றி உங்கள் வீட்டைப் பெற்றிடுங்கள்*

## புதிய வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகளுக்கு விண்ணப்பம் செய்வோருக்கான முன்னுரிமைத் திட்டங்கள்

பின்வரும் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றின்கீழ் புதிய வீட்டுக்கு விண்ணப்பம் செய்து, வீட்டைத் தேர்ந்தெடுக்க வரிசை எண் பெறும் வாய்ப்பினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

### முதல்முறை வீடு வாங்குவோர் (பெற்றோர், திருமணமான தம்பதியர்)



- யார் தகுதிபெறலாம்:
  - 18 வயதுக்கும் குறைவான வயதுடைய சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற ஒரு பிள்ளையாவது உள்ள குடும்பங்கள், அல்லது 40 வயதுக்கும் குறைவான வயதுடைய திருமணமான தம்பதியர்;
  - இதற்குமுன் ஒரு குடியிருப்புச் சொத்தின் உரிமையாளராக இல்லாதவர்கள் அல்லது விற்காதவர்கள்; அதோடு.
  - வீட்டுக்கு விண்ணப்பம் செய்வதற்கு முந்திய ஐந்தாண்டுகளில், தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் / மீதமுள்ள வீடுகளுக்குப் பதிவுசெய்ய வாய்ப்பு கிடைக்காதவர்கள்.
- 2023 ஆகஸ்ட் முதல், இந்தப் பிரிவினர் தங்களது முதல் வீட்டை வாங்குவதற்குக் கூடுதல் ஆதரவைப் பெறுவர்:
  - அனைத்துப் பேட்டைகளிலும் தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் / மீதமுள்ள வீடுகளுக்கு விண்ணப்பம் செய்யும்போது மொத்தம் மூன்று குலுக்கல் வாய்ப்புகள்.
  - குடும்பம், பிள்ளைப்பேறு முன்னுரிமைத் திட்டத்திற்கான தகுதியுடைமையின்கீழ், தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் ஒவ்வொரு வீட்டுத் திட்டத்திலும் 40% வரையிலான வீடுகளும், மீதமுள்ள வீடுகளுக்கான ஒவ்வொரு வீட்டுத் திட்டத்திலும் 60% வரையிலான வீடுகளும் ஒதுக்கி வைக்கப்படும்.
  - முதிர்ச்சியடையாத பேட்டைகளில் 4-அறை அல்லது அதனினும் சிறிய தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் வீடுகளுக்கு விண்ணப்பிக்கும்போது, குடும்பம், பிள்ளைப்பேறு முன்னுரிமை திட்டத்தின்கீழ் முதல் முன்னுரிமை அளிக்கப்படும்.

### திருமணமான பிள்ளைக்கான முன்னுரிமைத் திட்டம்

- இந்த முன்னுரிமைத் திட்டம், பெற்றோருடன் சேர்ந்து வாழும் அல்லது அருகில் (4 கிலோமீட்டர் தூரத்திற்குள்) வாழும் திருமணமான பிள்ளைகளுக்கானது.
- வருங்காலக் கணவன் / மனைவி விண்ணப்பதாரர்களும் விண்ணப்பம் செய்யலாம்.

### மூன்றாவது பிள்ளைக்கான முன்னுரிமைத் திட்டம்

- இந்த முன்னுரிமைத் திட்டம், இரண்டு பிள்ளைகளுக்கு மேல் உள்ள குடும்பங்களுக்கானது.



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

### பல-தலைமுறையினர் முன்னுரிமைத் திட்டம்

- தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் (BTO) அதே குடியிருப்பில் சேர்ந்து வாழ்வதற்காக இரண்டு வீடுகளுக்கு விண்ணப்பம் செய்யும் திருமணமான பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் உரியது.

### இரண்டாவது முறையாக வீடு வாங்குவோருக்கான உதவித் திட்டம்

- இரண்டாவது முறையாக வீடு வாங்க விண்ணப்பம் செய்வோர், விவாகரத்தானோர், அல்லது 18 வயதுக்குக் குறைவான குறைந்தது ஒரு சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பிள்ளை உள்ள வாழ்க்கைத்துணையை இழந்தோர் ஆகியோருக்கானது.

### வாடகைதாரர் முன்னுரிமைத் திட்டம்

- குறைந்தது 2 ஆண்டுகளாக வீவக வாடகை வீட்டில் தங்கியிருக்கும், சொந்த வீடு வாங்கும் விரும்பும் வாடகைதாரர்களுக்கானது.

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 6490 1111**
**www.hdb.gov.sg**

## முதல்முறையாக வீடு வாங்குவோருக்கான வீட்டு மானியங்கள்

**முதல்முறையாக வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடு வாங்கும் தகுதிபெறும் குடும்பங்களும் திருமணமாகாதவர்களும் $80,000 வரையிலான வீட்டு மானியங்களைப் பெறலாம்.**




### மேம்படுத்தப்பட்ட மத்திய சேம நிதி வீட்டு மானியம்

- சராசரி குடும்ப வருமானத்தின் அடிப்படையில் $80,000 வரையிலான வீட்டு மானியம் பெறலாம். இதற்கான வருமான வரம்பு $9,000.
- இந்த மானியத்தைப் பெறுவதற்கு வீட்டு வகைக்கு அல்லது அமைவிடத்திற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் கிடையாது. அதோடு, புதிய, மறுவிற்பனை வீடுகள் இரண்டுமே மானியத்திற்குத் தகுதிபெறும்.



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## முதல்முறையாக வீடு வாங்கும் குடும்பங்களுக்கான மானியங்கள்

- புதிய வீடுகளை வாங்கும் முதல்முறை வீடு வாங்கும் குடும்பங்கள், கணிசமான சந்தைத் தள்ளுபடிகள் தவிர, $80,000 வரையிலான மேம்படுத்தப்பட்ட வீட்டு மானியத்தைப் பெற்றிடலாம்.
- மறுவிற்பனை வீடு வாங்குவோர் $190,000 வரையிலான வீட்டு மானியங்களை அனுபவிக்கலாம். இதில் மேம்படுத்தப்பட்ட வீட்டு மானியம், குடும்ப மானியம் ($80,000 வரை), நெருக்கம் ஊக்குவிக்கும் வீட்டு மானியம் ($30,000 வரை) ஆகியன உள்ளடங்கும்.

## திருமணமாகாதவர்களுக்கான மானியங்கள்

- 35 வயதும் அதற்கு மேலான வயதுமுடைய திருமணமாகாதவர்கள், முதிர்ச்சி அடையாத குடியிருப்புப் பேட்டைகளிலுள்ள 2-அறை நீக்குப்போக்கான வீடுகள் (99 ஆண்டு குத்தகை) வீடுகளை வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து முதல்முறையாக வாங்கும்போது $40,000 வரையிலான மேம்படுத்தப்பட்ட வீட்டு மானியத்தை (திருமணமாகாதவர்கள்) பெறுவார்கள்.
- மறுவிற்பனை வீடு வாங்குவோர் $95,000 வரையிலான வீட்டு மானியங்களைப் பெறுவார்கள். இதில் மேம்படுத்தப்பட்ட வீட்டு மானியம் (திருமணமாகாதவர்கள்), திருமணமாகாதவர்களுக்கான வீட்டு மானியம் ($40,000 வரை), நெருக்கம் ஊக்குவிக்கும் வீட்டு மானியம் ($15,000 வரை) ஆகியன உள்ளடங்கும்.

## திருமணமாகாத பெற்றோருக்கான வீட்டுத் தெரிவுகள்

- வீடு சார்ந்த உதவி தேவைப்படும் திருமணமாகாத பெற்றோர் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தை அணுகலாம். பிள்ளைகள் வளர்வதற்கு நிலையான ஓர் இல்லம் இருப்பதை உறுதிசெய்யும் நோக்கில், ஒவ்வொரு கோரிக்கையும் முழுமையாகப் பரிசீலிக்கப்படும்.
- 21 வயதுக்கும் மேற்பட்ட திருமணமாகாத பெற்றோரில், நிலையான வேலையும் போதுமான நிதி வசதியும் கொண்டோருக்கு வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் நீக்குப்போக்கான தெரிவுகளை முன்வைக்கும். அதன்படி, அவர்கள் மறுவிற்பனை வீட்டை வாங்கலாம் அல்லது வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து முதிர்ச்சி அடையாத பேட்டை ஒன்றில் உள்ள 3-அறை வீடு வரை வாங்கலாம்.
- பிள்ளைகளின் மிகச் சிறந்த நலனைப் பேணிக்காக்கும் நோக்கில், ஒவ்வொரு கோரிக்கையும் முழுமையாக, தனிப்பட்ட நிலையில் பரிசீலிக்கப்படும். எந்தவொரு வீட்டையும் வாங்கத் தகுதிபெறாதோர், பொது வாடகை வீடுகளுக்குப் பரிசீலிக்கப்படுவார்கள்.

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 6490 1111**
**www.hdb.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# இரண்டாவது முறையாக வீடு வாங்குவோருக்கான வீட்டு மானியங்கள்




## மேம்படுத்தப்பட்ட மத்திய சேம நிதி வீட்டு மானியம்

- பின்வரும் இரண்டாம் முறை வீடு வாங்கும் குடும்பங்களுக்கு:
  - முதிர்ச்சியடையாத பேட்டையில் உள்ள மானிய விலையிலான தங்களுடைய 2-அறை வீட்டிலிருந்து 3-அறை வீட்டிற்கு மாறுவோர்.
  - பொது வாடகை வீட்டிலிருந்து 2-அறை அல்லது 3-அறை வீடு வாங்கிச் செல்வோர்.
- தகுதிபெறும் குடும்பங்கள் தங்களுடைய அடுத்த வீட்டை வாங்குவதற்கு $15,000 வரையிலான மேம்படுத்தப்பட்ட மத்திய சேம நிதி வீட்டு மானியத்தைப் பெறலாம்.

## புதுத்தொடக்க வீட்டு மானியம்

- பொது வாடகை வீடுகளில் இளம் பிள்ளைகளுடன் வசிக்கும், சொந்த வீட்டை வாங்க விரும்பும், இரண்டாம் முறை வீடு வாங்கும் குடும்பங்களுக்கு.
- பெற்றோர் 35 வயதுக்கும் 54 வயதுக்கும் இடைபட்டவர்களாக இருக்கவேண்டும்; 18 வயதுக்கும் குறைவான வயதுடைய சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற ஒரு பிள்ளையாவது இருக்கவேண்டும்.
- குடும்பங்கள், வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து சமூகநிலை மதிப்பீட்டுக் கடிதத்தைப் பெறத் தகுதிபெற்றிருக்கவேண்டும்.
- தகுதிபெறும் குடும்பங்கள், தங்களுடைய மத்திய சேம நிதி சாதாரணக் கணக்கில் புதுத் தொடக்க வீட்டு மானியமாக $50,000 பெறுவர்.
- தகுதிபெறும் குடும்பங்கள், வீட்டு உரிமையாளர்களும் அவர்களது வாழ்க்கைத்துணைகளும் 95 வயதுவரை வாழப் போதுமான அளவு, 45 முதல் 65 ஆண்டு வரையிலான குறைவான குத்தகைக் காலத்தைக் கொண்ட நீக்குப்போக்கான 2-அறை வீட்டை அல்லது 3-அறை வீட்டை வாங்கலாம்.
- பிள்ளைகளுக்கு நிலையான ஒரு வீட்டை உறுதிசெய்ய, வீடுகளின் குறைந்தபட்சக் குடியிருப்புக் காலம் 20 ஆண்டாக நிர்ணயிக்கப்படும்.

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 6490 1111**
**www.hdb.gov.sg**

# குறைவான கவலைகளுடன் குடும்பத்தைத் தொடங்குங்கள்

# Pg 9 - 11






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# குழந்தைகளின் வரவு

## *குறைவான கவலைகளுடன் குடும்பத்தைத் தொடங்குங்கள்*




### மெடிசேவ் பிரசவ உதவித் திட்டம்

- பெற்றோர்கள் பிரசவத்திற்கு முந்திய மருத்துவச் செலவுகளுக்காக மெடிசேவ் கணக்கிலிருந்து $900 வரை எடுக்கலாம்.
- அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதல் இரண்டு நாள்களுக்கு, நாள் ஒன்றுக்கு $550 வரையிலும், மூன்றாவது நாள் முதல், நாள் ஒன்றுக்கு $400 வரையிலும், மருத்துவமனையில் தங்குவதற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், அவர்களுடைய பிரசவ முறைகளைப் பொறுத்து, $750 முதல் $2,600 வரையிலான கூடுதல் தொகையை அறுவை சிகிச்சைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

### கருத்தரிக்க உதவும் சிகிச்சைகளுக்கு மெடிசேவ்

- கருத்தரிக்க சிரமப்படும் தம்பதிகள் கருத்தரிக்க உதவும் தொழில்நுட்ப (ART) சிகிச்சைகள் இதில் உள்ளடங்கும்.
- தம்பதிகள் தங்களது முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் அடுத்தடுத்த சிகிச்சை சுழல்களுக்குத் தங்களது மெடிசேவ் கணக்கிலிருந்து முறையே $6,000, $5,000 மற்றும் $4,000 வரை எடுக்கலாம். வாழ்நாளில் அதிகபட்சமாக $15,000 வரை மட்டுமே பயன்படுத்த முடியும்.



சுகாதார அமைச்சு: 6325 9220
www.moh.gov.sg

## பொது மருத்துவமனைகளின் கருத்தரிக்க உதவும் சிகிச்சைகளுக்கு மேம்பட்ட இணை நிதி

- கருத்தரிப்பதற்கு மருத்துவ உதவி தேவைப்படும் தம்பதிகளுக்கு உதவக்கூடிய IVF, IUI போன்ற செயற்கை கருத்தரிப்பு முறைகள் இதில் உள்ளடங்கும்.
- பொது மருத்துவமனைகளில் கருத்தரிக்க உதவும் தொழில்நுட்ப (ART) சிகிச்சைகள் நாடும் தகுதிபெறும் தம்பதிகள், அதிகபட்சமாக 3 புதிய மற்றும் 3 உறைந்த ART கருத்தரிப்புச் சுழல்களுக்கு அரசாங்கத்திடமிருந்து 75% வரை ($7,700 வரை) இணை நிதி பெறலாம்.
- பொது AR நிலையங்களில் IUI கருத்தரிப்பு  சிகிச்சைகள் பெறும் தகுதிபெறும் தம்பதிகள், 3 IUI சிகிச்சை சுழல்கள் வரை, ஒவ்வொரு சுழலுக்கும் 75% வரை இணை நிதி பெறலாம். இதற்கு $1,000 வரம்பு உண்டு.
- கருத்தரிக்க முயலும் பெண்ணின் வயது 40 அல்லது அதைவிட அதிகமாக இருந்தால், ஆறு ART சிகிச்சை சுழல்களில் இரண்டு சுழல்கள் வரை அவருக்குச் செய்யப்படலாம். ஆனால், அந்தப் பெண் 40 வயதுக்கு முன்பாக ART அல்லது IUI சிகிச்சைகள் செய்து பார்த்தவராக இருக்கக்கூடாது.

**சுகாதார அமைச்சு: 6325 9220**
**www.moh.gov.sg**




**போர்க்காலப் படைவீரர்கள் திருமணம் செய்து கொள்ளும்போது அல்லது குழந்தை பெறும்போது $100 பெறுமானமுள்ள உதவித்தொகை பெறுவார்கள்!**

**தற்காப்பு அமைச்சு: 1800 367 6767**
**www.ns.sg**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

ASK Kopi Kakis
GOVERNMENT POLICIES MADE SIMPLE

People's Association

# நம் பிள்ளைகளுக்குச் சிறந்த வாழ்வை அளித்திடுவோம்
# Pg 12 - 24




இந்தப் பகுதியில், உங்கள் குடும்பம் மற்றும் பிள்ளைகளின் சுகாதாரப் பராமரிப்பு, குழந்தைப் பராமரிப்பு, கல்வித் தேவைகள் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் திட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்:

- பிறப்பிலிருந்து மெடிஷீல்டு லைஃப் பாதுகாப்பு
- குழந்தைப் பராமரிப்பு, கைக்குழந்தைப் பராமரிப்பு மானியங்கள்
- எடுசேவ் கல்விச்சேமிப்பு



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# வளரும் பருவம்

## *உங்கள் பிள்ளைகளுக்கு ஆகச்சிறந்த தொடக்கத்தை அமைத்துக் கொடுங்கள்*




### பிறந்த குழந்தைகளுக்கு மெடிசேவ் மானியம்


- சிங்கப்பூர் குடியுரிமையுடன் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் தங்களது மெடிசேவ் கணக்கில் $4,000 மானியம் பெறுவார்கள். குழந்தையின் சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளுக்கு இந்த மானியம் துணை புரியும். மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள், குழந்தைகளுக்குப் பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகள், மருத்துவமனையில் தங்கியிருக்கும் செலவு, அங்கீகரிக்கப்பட்ட வெளிநோயாளி சிகிச்சைகள் போன்றவை இதில் உள்ளடங்கும்.

**மத்திய சேம நிதிக் கழகம்: 1800 227 1188**
**www.cpf.gov.sg**

### பிறப்பிலிருந்து மெடிஷீல்டு லைஃப் பாதுகாப்பு

- சிங்கப்பூர் குடியுரிமையுள்ள எல்லாக் குழந்தைகளும் பிறப்பிலிருந்து வாழ்நாள் முழுவதும் தானாகவே மெடிஷீல்டு லைஃப் காப்புறுதித் திட்டப் பாதுகாப்பைப் பெறுவார்கள். பிறவி நோய்களும் பிறந்த புதிதில் உண்டாகும் நோய்களும் இதில் உள்ளடங்கும்.

**சுகாதார அமைச்சு: 6325 9220**
**www.moh.gov.sg**






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## குழந்தை போனஸ் ரொக்க அன்பளிப்பு

- ஆரம்பகால பிள்ளை வளர்ப்புச் செலவுகளைச் சமாளிக்க பெற்றோருக்கு உதவுகிறது. பிள்ளை ஆறரை வயதை எட்டும் வரையில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, குழந்தை போனஸ் ரொக்க அன்பளிப்புத் தொகை கட்டங்கட்டமாக வழங்கப்படும்.
  - முதல் மற்றும் இரண்டாவது பிள்ளைக்கு $11,000.
  - மூன்றாவது மற்றும் அதற்கடுத்த பிள்ளைகளுக்கு $13,000.

## பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு


- இ ண்டு அம்சங்களைக் கொண்ட சிறப்பு சேமிப்புக் கணக்கு:
  - **பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு** தொடக்க மானியம்: ஒவ்வொரு குழந்தைக்கும் அரசாங்கத்தின் பங்களிப்பாக $5000 வழங்கப்படுகிறது. இதற்காக, பெற்றோர் எவ்வித ஆரம்ப வைப்புத்தொகையும் செலுத்தவேண்டியதில்லை.
  - **அரசாங்க இணை நிதி**: பெற்றோர் கணக்கில் போடும் சேமிப்புக்கு, வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையில், குறிப்பிட்ட வரம்புநிலை வரை அரசாங்கம் இணை நிதி.

| பிறப்பு வரிசை | பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு | | |
|---|---|---|---|
| | தொடக்க மானியம் (பெற்றோரிடமிருந்து ஆரம்ப வைப்புத்தொகை தேவையில்லை) (a) | அரசாங்கத்தின் அதிகபட்ச இணை நிதி (b) | அரசாங்கத்தின் அதிகபட்சப் பங்களிப்புகள் (a + b) |
| முதலாவது குழந்தை | $5,000 | $4,000 | $9,000 |
| இரண்டாவது குழந்தை | | $7,000 | $12,000 |
| மூன்றாவது குழந்தை | | $9,000 | $14,000 |
| நான்காவது குழந்தை | | $9,000 | $14,000 |
| ஐந்தாவது & அடுத்தடுத்த குழந்தை | | $15,000 | $20,000 |

## பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு நிரப்புத்தொகை 2023

- 1 ஜனவரி 2017 முதல் 31 டிசம்பர் 2023 வரை பிறந்த சிங்கப்பூர்க் குழந்தைகள், செப்டம்பர் 2023 முதல், தங்களது பிள்ளை மேம்பாட்டுக் கணக்கில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் $400 நிரப்புத்தொகையைப் பெறுவர்.
- மேம்படுத்தப்பட்ட குழந்தை போனஸ் திட்டம் பற்றிய மேல்விவரங்களுக்கு: go.gov.sg/mp2023enhanced-infographic.

சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (குழந்தை போனஸ் திட்டம்): **1800 111 2222**
**www.babybonus.msf.gov.sg**






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

### புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு முதல் கடப்பிதழ் விண்ணப்பக் கட்டணம் தள்ளுபடி

- 1 ஜனவரி 2020 முதல், புதிதாகப் பிறந்த சிங்கப்பூர்க் குடிமக்களுக்கான கடப்பிதழ் விண்ணப்பம் குழந்தையின் முதல் பிறந்தநாளுக்குள் செய்யப்பட்டால், அதற்கான விண்ணப்பக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

**குடிநுழைவு சோதனைச்சாவடி ஆணையம்: 6391 6100**
**www.ica.gov.sg**

## கைக்குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளின் பராமரிப்பு

கடந்த பத்தாண்டில், முழுநாள் பாலர் பள்ளி இடங்கள் ஒரு மடங்குக்குமேல் அதிகரித்துள்ளன. தற்போது, 3 வயதுக்கும் மேற்பட்ட வயதுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் போதுமான இடங்கள் உள்ளன. 2025ஆம் ஆண்டுக்குள், 80% பிள்ளைகள் அரசாங்க ஆதரவுடன் கூடிய பாலர் பள்ளியில் சேர்ந்திடலாம்.



### குழந்தைப் பராமரிப்பு, கைக்குழந்தைப் பராமரிப்பு மானியங்கள்

- சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பிள்ளைகளை, பாலர் பருவ மேம்பாட்டு அமைப்பின் உரிமம்பெற்ற குழந்தைப் பராமரிப்பு நிலையங்களில் சேர்த்திருக்கும் குடும்பங்கள், ஒவ்வொரு மாதமும் கைக்குழந்தைப் பராமரிப்புக்கு $600 வரையிலும், குழந்தைப் பராமரிப்புக்கு $300 வரையிலும் அடிப்படை மானியம் பெறுவார்கள்.
- வேலை செய்யும் தாய்மார்களைக் கொண்ட குடும்பங்களின் மொத்த மாத வருமானம் $12,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், அல்லது குடும்பத்தின் சராசரி வருமானம் $3,000 மற்றும் அதற்குக் குறைவு, பணவசதிச் சோதனையின் அடிப்படையில், ஒவ்வொரு மாதமும் கைக்குழந்தைப் பராமரிப்புக்கு $710 வரையிலும், குழந்தைப் பராமரிப்புக்கு $467 வரையிலும் கூடுதல் மானியம் பெறுவார்கள்.
- குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின் காரணமாக (எ.கா. வேலை தேடுகிறார், கர்ப்பமாக இருக்கிறார், 24 மாதத்திற்குக் குறைவான வயதுடைய இளைய குழந்தையைப் பராமரிக்கிறார்) வேலை செய்யாத தாய்மார்களும் இந்த மானியங்களுக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொருவரது சூழ்நிலையின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.
- வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் பொது வாடகை வீட்டுத் திட்டம் அல்லது கொம்கேர் திட்டத்தின்கீழ் ஆதரவு பெற்று வரும் குடும்பங்கள், பாலர் பள்ளிக்கு விண்ணப்பித்த உடனேயே, விண்ணப்பதாரரின்/ ஒற்றைத் தந்தையின் வேலை நிலையைக் கருதாமல், அதிகபட்ச நிதியுதவிகளுக்குத் தகுதிபெறுவர்.
- வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் பொது வாடகை வீட்டுத் திட்டத்தின்கீழ் இடம்பெறும் குடும்பங்கள் அல்லது கொம்கேர் ஆதரவு பெறும் குடும்பங்கள் விண்ணப்பம் செய்யும்போது, அதிகபட்ச பாலர் பள்ளி மானியத்திற்குத் தானாகவே தகுதி பெறுவார்கள். விண்ணப்பதாரரின் / ஒற்றைத் தந்தையின் வேலை நிலவரம் ஒரு பொருட்டாகக் கருதப்படாது.



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## பாலர் பள்ளி கட்டண உதவித் திட்டம்

- சிங்கப்பூர்க் குடியுரிமை கொண்ட பிள்ளைகளைக் கல்வி அமைச்சு அல்லது முதன்மை நிறுவனங்கள் நடத்தும் பாலர் பள்ளிகளில் சேர்க்கும் குடும்பங்கள், $12,000க்கும் குறைவான மொத்த மாதாந்தரக் குடும்ப வருமானத்தை அல்லது $3,000க்கும் குறைவான தனிநபர் குடும்ப வருமானத்தைக் கொண்டிருந்தால், பண வசதிச் சோதனைமூலம் பாலர் பள்ளி நிதியுதவித் திட்டத்தின் ஆதரவைப் பெறலாம்.
- வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் பொது வாடகை வீட்டுத் திட்டம் அல்லது கொம்கேர் திட்டத்தின்கீழ் ஆதரவு பெற்று வரும் குடும்பங்கள், பாலர் பள்ளி நிதியுதவித் திட்டத்தின்கீழ் அதிகபட்ச நிதியுதவிகளுக்குத் தகுதிபெறுவர்.
- முதற்கட்டப் பதிவுச் செலவுகளுக்கு உதவி தேவைப்படும் தகுதிபெறும் குறைந்த வருமானக் குடும்பங்கள், பாலர் பள்ளி நிதியுதவித் திட்டத்தின்கீழ் தொடக்க மானியத்தை ஆண்டுதோறும் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

**பாலர் பருவ மேம்பாட்டு அமைப்பு: 6735 9213**
**www.ecda.gov.sg**

## கிட்ஸ்டார்ட் திட்டம்

- குறைந்த வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த 6 வயது வரையிலான சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பிள்ளைகள் வாழ்க்கையில் நல்லதொரு தொடக்கத்தைப் பெறுவதற்கு இத்திட்டம் துணைபுரிகிறது.
- இத்திட்டம் பாலர் பருவ வளர்ச்சியில் பெற்றோருக்கும் பராமரிப்பாளர்களுக்கும் ஆதரவளிக்கிறது. அதோடு, தேவையானபோது குடும்பங்களுக்கான ஆதரவை ஒருங்கிணைத்து வலுப்படுத்துவதோடு, பிறப்பிலிருந்து பிள்ளைகளின் வளர்ச்சியையும் கண்காணிக்கிறது.

**கிட்ஸ்டார்ட்: 6908 0155**
**www.kidstart.sg**



என் பிள்ளையின் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திற்கும் எனக்குத் தேவைப்படும் ஆதரவு கிடைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்!

நடப்பிலிருக்கும் இந்தத் திட்டங்களுடன், சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு பிள்ளைக்கும் வாழ்க்கையில் நல்லதொரு தொடக்கம் கிடைக்கும். அவர்கள் வளர்வதற்கும், தங்களது கனவுகளை நனவாக்குவதற்கும், வாழ்நாள் கற்றல் பயணத்தைத் தொடர்வதற்கும் வலுவான அடிப்படை அமைத்துத் தரப்படும்!






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# 0 முதல் 6 வயதுடைய பிள்ளைகளுக்கான ஆரம்பகாலக் குறுக்கீட்டுத் திட்டம்

ஒரு குழந்தையின் வாழ்க்கையில், ஆரம்ப ஆண்டுகள் அவர்களின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான ஒரு காலகட்டம் ஆகும். வளர்ச்சித் தேவையுடைய பிள்ளைகள், தன்னிச்சையாகச் செயல்படுவதற்குரிய திறனாற்றலை அதிகப்படுத்திக்கொள்வதற்குத் தேவையான திறன்களைப் பெற உதவும் வகையில், ஆரம்பகாலக் குறுக்கீட்டு நடவடிக்கைகள், இந்த வளர்ச்சிக் கட்டத்தைப் பயன்படுத்திக்கொள்கின்றன.

## a) வளர்ச்சி ஆதரவு - கற்றல் ஆதரவுத் திட்டம்

- குறைந்த அளவிலான ஆரம்பகாலக் குறுக்கீட்டு ஆதரவு தேவைப்படும் பிள்ளைகள், பாலர் பள்ளிச் சூழலிலேயே குறுகியகால ஆதரவு பெறுவதற்குப் பரிந்துரைக்கப்படலாம்.

## b) கைக்குழந்தைகள், சிறுவர்களுக்கான ஆரம்பகாலக் குறுக்கீட்டுத் திட்டம்

- நடுத்தர முதல் அதிக அளவிலான ஆரம்பகாலக் குறுக்கீட்டு ஆதரவு தேவைப்படும் பிள்ளைகள், குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் உரிய ஆரம்பகாலக் குறுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படும் தொழிலர்கள், துணைச் சுகாதாரத் தொழிலர்கள் ஆகியோர்மூலம் மேம்பட்ட ஆதரவைப் பெறலாம்.
- மாறாக, இந்தப் பிள்ளைகள், **குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் உரிய ஆரம்பகாலக் குறுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் (தனியார்)** ஆதரவு பெறலாம்.

## c) வளர்ச்சி ஆதரவு பிளஸ் திட்டம்

- குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் உரிய ஆரம்பகாலக் குறுக்கீட்டு த் திட்டத்தின்கீழ் நல்ல முன்னேற்றம் கண்ட பிள்ளைகள், பாலர் பள்ளிச் சூழலில் ஆதரவு பெறுவதற்கு மாறலாம்.

## d) அனைவரையும் உள்ளடக்கிய ஆதரவுத் திட்டம்

- நடுத்தர அளவிலான ஆரம்பகாலக் குறுக்கீட்டு ஆதரவு தேவைப்படும் பிள்ளைகளுக்கு அனைவரையும் உள்ளடக்கிய ஆதரவுத் திட்டம் உகந்ததாக இருக்கலாம். இத்திட்டம் வளரும் பிள்ளைகளுக்கும் வளர்ச்சித் தேவையுடைய பிள்ளைகளுக்கும் பாலர் பள்ளிச் சூழலில் அனைவரையும் உள்ளடக்கிய கற்றல் அனுபவத்தை அளிக்கும்.

ஆரம்பகாலக் குறுக்கீடு தேவைப்படும் இளம் பிள்ளைகளுக்கான பெற்றோர் வழிகாட்டியைப் பாருங்கள்:
go.gov.sg/ecda-parentsguide-tamil



**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.enablingguide.sg**

## சிறப்புத் தேவைகள் சேமிப்புத் திட்டம்

- சிறப்புத் தேவைகள் உள்ள பிள்ளைகளின் நீண்டகாலப் பராமரிப்புக்காகப் பெற்றோர்கள் தங்களது மத்திய சேம நிதி சேமிப்பை ஒதுக்கி வைப்பதற்கு இத்திட்டம் அனுமதிக்கிறது.
- பெற்றோரின் மறைவுக்குப் பிறகு, சிறப்புத் தேவைகள் உள்ள அன்புக்குரியவருக்கு நிலையான வழங்குதொகைகள் தொடர்ந்து கிடைப்பதற்குப் பெற்றோர்கள் ஏற்பாடு செய்யலாம்.

## சிறப்புத் தேவையுள்ளோருக்கான அறக்கட்டளை நிறுவன அறநிதி

- சிறப்புத் தேவைகள் உள்ளோருக்குக் கட்டுப்படியாகும் அறநிதிச் சேவைகளை இந்நிறுவனம் வழங்குகிறது. பராமரிப்பாளர் இறந்துவிட்டால் அல்லது இயலாமைக்கு உள்ளானால், உங்கள் அன்புக்குரியவருக்காக நிதிகளை நிர்வகிக்கும் அறங்காவலராக நிறுவனம் செயல்படும்.
- உங்கள் உயில், காப்புறுதி, மத்திய சேம நிதி சேமிப்பு ஆகியவற்றில் நீங்கள் விட்டுச்செல்பவை அனைத்தும் சிறப்புத் தேவைகள் உள்ள அன்புக்குரியவருக்குக் கிடைப்பதையும் அறநிதி உறுதி செய்யும்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**

**Special Needs Trust Co Ltd: 6278 9598**
**www.sntc.org.sg**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# பள்ளி செல்லும் பிள்ளைகளின் பராமரிப்பு

## எடுசேவ் கல்விச்சேமிப்பு

- சிங்கப்பூர்க் குடியுரிமையுடைய மாணவர்கள் தங்களது எடுசேவ் கல்விச்சேமிப்புக் கணக்கில் உள்ள நிதிகளைப் பயன்படுத்தி பின்வருபனவற்றுக்குப் பணம் செலுத்தலாம்;
  - பள்ளிகளால் ஏற்பாடு செய்யப்படும் வளமூட்டும் திட்டங்கள்;
  - அனுமதிக்கப்பட்ட பல்வகை கட்டணங்கள்; மற்றும்
  - பள்ளிகளால் ஏற்பாடு செய்யப்படும் மின்னிலக்கக் கற்றல் திட்டத்தின்கீழ் உயர்நிலைப்பள்ளிகள், தொடக்கக்கல்லூரிகள், மில்லேனியா கல்வி நிலையம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் தனி நபர் கற்றல் சாதனங்கள்.
- கல்வி அமைச்சின் நிதியாதரவு பெறும் பள்ளிகளில் பயிலும் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஆண்டுதோறும் முறையே $230, $290 பெறுவர்.
  - கல்வி அமைச்சின் நிதியாதரவு பெறும் பள்ளிகளில் பயிலாத 7 முதல் 12 வயதுடைய சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற பிள்ளைகள், தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குரிய தொகையைப் பெறுவர்.
  - கல்வி அமைச்சின் நிதியாதரவு பெறும் பள்ளிகளில் பயிலாத 13 முதல் 16 வயதுடைய சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற பிள்ளைகள், உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குரிய தொகையைப் பெறுவர்.
- 2023 மே மாதத்தில், சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற பிள்ளைகள் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் $300 நிரப்புத்தொகையைத் தங்களது எடுசேவ் கல்விச்சேமிப்புக் கணக்கில் பெறுவர்.

## எடுசேவ் கல்விச்சேமிப்பு தகுதிச்சிறப்பு உதவித்தொகை

- ஒவ்வொரு நிலையிலும் (தொடக்கநிலை 1, 2 தவிர) உச்சத் தேர்ச்சி பெற்றுத் தகுதிபெறும் நன்னடத்தையுள்ள 25% மாணவர்கள், அவர்களின் கல்வி நிலையைப் பொறுத்து, $200 முதல் $500 வரை பெறுவர்.
- $7,500க்கும் குறைவான மொத்த மாதாந்தரக் குடும்ப வருமானம் அல்லது $1,875க்கும் குறைவான தனிநபர் மாதாந்தரக் குடும்ப வருமானத்தைக் கொண்டு, அரசாங்கப் பள்ளிகள், அரசாங்க உதவி பெறும் பள்ளிகள், நிபுணத்துவப் பள்ளிகள், தொடக்கக்கல்லூரிகள் / மில்லேனியா கல்வி நிலையம், பலதுறைத் தொழிற்கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் ஆகியவற்றில் பயிலும் சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற மாணவர்களுக்கு ஏற்புடையது.

## எடுசேவ் கல்விச்சேமிப்பு உபகாரச் சம்பளம்

- நன்னடத்தை, கல்வித் தேர்ச்சி அடிப்படையில் தத்தம் நிலைகளில் உச்சத் தேர்ச்சி பெற்ற 10% சிங்கப்பூர்க் குடியுரிமை கொண்ட மாணவர்களுக்கு. கல்வி நிலையைப் பொறுத்து, மாணவர்கள் $350 முதல் $500 பெறுவர்.

## சிறப்பு மாணவர் பராமரிப்பு நிலையம்

- சிறப்புக் கல்விப் பள்ளிகளில் பயிலும் 7 முதல் 18 வயதுடைய மாணவர்களுக்கு பள்ளிக்கு முந்திய, பிந்திய பராமரிப்பை வழங்குகிறது.
- குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $9,200 அல்லது அதைவிடக் குறைவாகவோ, தனிநபரின் சராசரி வருமானம் $2,300 அல்லது அதைவிடக் குறைவாகவோ உள்ள குடும்பங்கள், பணவசதிச் சோதனையின் அடிப்படையிலான நிதி உதவிக்குத் தகுதி பெறுவார்கள்.



பிள்ளையின் பள்ளி



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கு

- பெற்றோர்கள் பிள்ளைகளின் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்விக்குப் பணம் சேமிக்க இந்தக் கணக்கு உதவுகிறது.
- உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கு தானாகத் திறக்கப்படும்:
  - அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளை மேம்பாட்டுக் கணக்கில் அல்லது எடுசேவ் கல்விச்சேமிப்புக் கணக்கில் மீதத் தொகை ஏதேனும் இருந்தால், அவை உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்குக்கு மாற்றிவிடப்படும்; அல்லது
  - ஏற்புடைய அரசாங்கப் பங்களிப்புகளுக்கு / விருதுகளுக்கு பிள்ளை தகுதிபெறும் முதல் ஆண்டில்.
- 2023 மே மாதத்தில், சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற பிள்ளைகள் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் $300 நிரப்புத்தொகையைத் தங்களது உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கில் பெற்றனர்.

**கல்வி அமைச்சு: 6260 0777**
**www.moe.edu.sg**

## மாணவர் பராமரிப்புக் கட்டண உதவி

- சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சில் பதிவு செய்யப்பட்ட மாணவர் பராமரிப்பு நிலையத்திற்குச் செல்லும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள அல்லது நிரந்தரவாசத் தகுதிபெற்ற (அதே வீட்டில் வசிக்கும் குடும்பத்தினரில் குறைந்தது ஒருவர் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றிருக்கவேண்டும்) மாணவர்கள் (7 முதல் 14 வயது), மாணவர் பராமரிப்புக் கட்டண உதவி பெறுவார்கள்.
- குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $4,500 மற்றும் அதற்குக் குறைவாகவோ, அல்லது தனிநபரின் சராசரி மாத வருமானம் $1,125 மற்றும் அதற்குக் குறைவாகவோ உள்ள குடும்பங்கள், மாணவர் பராமரிப்புக் கட்டண உதவியாக மாதத்திற்கு $290 வரை பெறத் தகுதி பெறுவார்கள். அதோடு, வைப்புத்தொகை, பதிவுக் கட்டணம், சீருடை, காப்புறுதி போன்ற ஆரம்பச் செலவுகளுக்கு, ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒருமுறை மட்டும் $400 வரையிலான தொடக்க மானியமும் பெறலாம்.

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (கொம்கேர்): 1800 222 0000**
**www.msf.gov.sg/comcare**

## கல்வி அமைச்சின் நிதி உதவித் திட்டம்

- $3,000க்கும் குறைவான மொத்த மாதாந்தரக் குடும்ப வருமானம் அல்லது $750க்கும் குறைவான தனிநபர் மாதாந்தரக் குடும்ப வருமானத்தைக் கொண்டு, அரசாங்கப் பள்ளிகள், அரசாங்க உதவி பெறும் பள்ளிகள், நிபுணத்துவப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற மாணவர்களுக்கு ஏற்புடையது.
- முழுமையான பள்ளிக் கட்டணம், வழக்கமான துணைக் கட்டணம், போக்குவரத்து நிதி உதவி (தொடக்கநிலை முதல் புதுமுகக் கல்வி வரை அனைத்து நிலைகளுக்கும்), இலவசப் பாடப்புத்தகம், பள்ளிச் சீருடை, பள்ளியில் சாப்பிட நிதி உதவி (தொடக்கநிலை, உயர்நிலை ஆகியவற்றுக்கு மட்டும்), வருடாந்தர ரொக்க உதவி நிதி (புகுமுகக் கல்விக்கு மட்டும்) ஆகியன இதில் உள்ளடங்கும்.





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி நிலையங்களுக்கு அரசாங்கம் வழங்கும் கல்வி உதவி நிதி

- பொது நிதி பெறும் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி நிலையங்களில் பயிலும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள முழுநேர மாணவர்கள், குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $10,000 மற்றும் அதற்குக் குறைவாகவோ அல்லது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,500 மற்றும் அதற்குக் குறைவாகவோ இருக்கும் நிலையில், குடும்ப வருமானத்தைப் பொறுத்து, உயர்கல்வி சமூக உதவி நிதிக்கு அல்லது உயர்கல்வி உதவி நிதிக்குத் தகுதி பெறுவார்கள்.

| கல்வி நிலை | கல்வி ஆண்டு 2023 முதல் வருடாந்தர கல்வி உதவி நிதித் தொகை |
|---|---|
| தொழில்நுட்பக் கல்விக்கழக நைடெக் மற்றும் மேல்நிலை நைடெக் மாணவர்கள் | **$440 - $1,600** (அடிமட்ட வருமானப் பிரிவில் இருப்பவர்களுக்கு 100% கல்விக் கட்டண நிதி உதவியும் கிடைக்கும்) |
| டிப்ளோமா மாணவர்கள் | **$900 - $2,950** |
| பட்டக்கல்வி மாணவர்கள் (மருத்துவத்துறை / பல் மருத்துவத்துறை மாணவர்கள் தவிர்த்து) | **$1,350 - $6,300** |
| சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக / நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக மருத்துவத்துறை, பல் மருத்துவத்துறை மாணவர்கள் | **$6,200 - $20,200** (சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம்) **$11,000 - $25,000** (நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்) |

- பொது நிதி பெறும் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி நிலையங்களில் பயிலும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பகுதிநேர மாணவர்கள், குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $10,000 மற்றும் அதற்குக் குறைவாகவோ அல்லது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,500 மற்றும் அதற்குக் குறைவாகவோ இருக்கும் நிலையில், உயர்கல்வி உதவி நிதிக்குத் தகுதி பெறுவார்கள்.

| கல்வி நிலை | கல்வி ஆண்டு 2022 முதல் வருடாந்தர கல்வி உதவி நிதித் தொகை |
|---|---|
| தொழில்நுட்பக் கல்விக்கழகத்தின் பகுதிநேர நைடெக் மற்றும் மேல்நிலை நைடெக் மாணவர்கள் | **$140** |
| பகுதிநேர டிப்ளோமா | **$320 - $850** |
| பகுதிநேரப் பட்டக்கல்வி மாணவர்கள் | **$720 - $2,550** |

**கல்வி அமைச்சு: 6260 0777**
**www.moe.edu.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## பயணச் சலுகை அட்டைகள்

- 7 வயதுக்குக் குறைவான வயதுடைய, 0.9 மீட்டருக்கும் அதிகமான உயரமுடைய பிள்ளைகள், செல்லுபடியாகும் பிள்ளைச் சலுகை அட்டையைக் கொண்டு இலவசமாகப் பயணம் செய்யலாம். 0.9 மீட்டருக்குக் குறைவான உயரமுடைய பிள்ளைகள், பயணக் கட்டணம் செலுத்தும் பயணி ஒருவருடன் இலவசமாகப் பயணம் மேற்கொள்ளலாம்.
- தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிலும் மாணவர்களுக்கும், தேசிய சேவையாளர்களுக்கும்:

| | அடிப்படை பேருந்து சேவையில் எண்ணற்ற பயணங்கள் | ரயிலில் எண்ணற்ற பயணங்கள் | அடிப்படை பேருந்து சேவையிலும் ரயிலிலும் எண்ணற்ற பயணங்கள் |
|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி மாணவர்கள் | **$24.00** | **$21.00** | **$43.50** |
| உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் (தொடக்கக் கல்லூரி / தொழில்நுட்பக் கல்விக்கழக மாணவர்கள் உட்பட) / முழுநேர டிப்ளோமா மாணவர்கள்* | **$29.00** | **$26.50** | **$54.00** |
| முழுநேர பட்டக்கல்வி மாணவர்கள்* / முழுநேர தேசிய சேவையாளர்கள் | **$55.50** | **$48.00** | **$90.50** |

**தனியார் கல்வி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் படித்துக் கொண்டிருக்கும், அல்லது வீட்டிலிருந்து சிங்கப்பூர்-கேம்ப்ரிட்ஜ் பொதுக்கல்விச் சான்றிதழ் வழக்கநிலை, சாதாரண நிலை அல்லது மேல்நிலைத் தேர்ச்சிக்கு, அல்லது அனைத்துலக பெக்கலாரட் தேர்ச்சிக்குப் படித்துக் கொண்டிருக்கும் தகுதிபெறும் மாணவர்கள் இதில் உள்ளடங்குவர்.*

**SimplyGo: 1800 2255 663**
**www.simplygo.com.sg**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# பெற்றோருக்கான விடுப்பும் அனுகூலத் திட்டங்களும்



நமக்கென ஒரு குடும்பத்தை அமைத்துவிட்டோம். இனி நம் பிள்ளைகளுடன் **கூடுதல் நேரம்** செலவிட முடிந்தால் நன்றாக இருக்கும்.

வேலை செய்யும் பெற்றோராக, நான் பெற்றோர் விடுப்புத் திட்டங்களை வரவேற்கிறேன். என் பிள்ளைகளுடன் நேரம் செலவிடவும், பிணைப்பை வலுப்படுத்திக்கொள்ளவும் அவை துணைபுரிகின்றன.



## அரசாங்கம் பணம் தரும் மகப்பேறு விடுப்பு

- சுயதொழில் புரிவோர் உள்ளிட்ட தகுதிபெறும் வேலை செய்யும் தாய்மார், அரசாங்கம் பணம் தரும் 16 வார மகப்பேற்று விடுப்புக்குத் தகுதிபெறுவர். அவர்கள் அந்த விடுப்பைப் பிள்ளையின் பிறந்த தேதியிலிருந்து 12 மாதத்திற்குள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

## அரசாங்கம் பணம் தரும் தந்தையர் விடுப்பு

- தகுதிபெறும் வேலை செய்யும் தந்தையர் (சுயதொழில் புரிவோர் உள்பட) அரசாங்கம் பணம் தரும் தந்தைக்கான 2 வார விடுப்புக்குத் தகுதிபெறுவர். அவர்கள் அந்த விடுப்பைப் பிள்ளையின் பிறந்த தேதியிலிருந்து 12 மாதத்திற்குள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். 1 ஜனவரி 2024 முதல் பிறக்கும் குழந்தைகளின் தகுதிபெறும் தந்தையர், அரசாங்கம் பணம் தரும் தந்தைக்கான 4 வார* விடுப்புக்குத் தகுதிபெறுவர்.

** கூடுதலான 2 வார விடுப்பு, சுய விருப்பத்தின் பேரில் அளிக்கப்படுகிறது. அவ்வாறு கூடுதலாக 2 வார விடுப்பை அளிக்கத் தயாராக உள்ள முதலாளிகளுக்கு, அதற்குரிய தொகையை அரசாங்கம் திரும்பக் கொடுத்து ஈடுசெய்திடும்.*

## அரசாங்கம் பணம் தரும் பகிர்ந்து கொள்கிற பெற்றோர் விடுப்பு

- சுயதொழில் புரிவோர் உள்ளிட்ட தகுதிபெறும் வேலை செய்யும் தந்தையர் தங்களது மனைவியின் அரசாங்கம் பணம் தரும் மகப்பேற்று விடுப்பு அல்லது தத்தெடுப்பு விடுப்பு அனுகூலங்களிலிருந்து, மனைவி ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், 4 வார விடுப்பு வரை பகிர்ந்துகொள்ளலாம்.

## தாய்மாருக்கான தத்தெடுப்பு விடுப்பு

- சுயதொழில் புரிவோர் உள்ளிட்ட தகுதிபெறும் வேலை செய்யும் தத்தெடுத்த தாய்மார், 12 வாரத் தத்தெடுப்பு விடுப்புக்குத் தகுதிபெறுவர். அவர்கள் அந்த விடுப்பைப் பிள்ளையின் பிறந்த தேதியிலிருந்து 12 மாதத்திற்குள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

**அரசாங்கம் பணம் தரும் விடுப்புத் திட்டங்கள்: 1800 253 4757**
**www.profamilyleave.msf.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## அரசாங்கம் பணம் தரும் மகப்பேறு அனுகூலம்

- சுயதொழில் புரிவோர் உள்ளிட்ட தகுதிபெறும் வேலை செய்யும் தாய்மார், வேலை நிமித்தம் காரணமாக அரசாங்கம் பணம் தரும் மகப்பேற்று விடுப்புக்குத் தகுதி பெறாவிட்டால், அதற்கு ஈடான ரொக்கத் தொகையைப் பெற்றிடலாம். அதற்கு, அவர்களது சிங்கப்பூர்க் குடியுரிமையுள்ள பிள்ளையின் பிறந்த தேதிக்கு முந்திய 12 மாதங்களில் குறைந்தது 90 நாள்கள் அவர்கள் வேலையில் இருந்திருக்கவேண்டும்.

## அரசாங்கம் பணம் தரும் தத்தெடுப்பு அனுகூலங்கள்

- சுயதொழில் புரிவோர் உள்ளிட்ட தகுதிபெறும் வேலை செய்யும் தாய்மார், வேலை நிமித்தம் காரணமாகத் தத்தெடுப்பு விடுப்புக்குத் தகுதி பெறாவிட்டால், அதற்கு ஈடான ரொக்கத் தொகையைப் பெற்றிடலாம். அதற்கு, அவர்களது சிங்கப்பூர்க் குடியுரிமையுள்ள பிள்ளையின் பிறந்த தேதிக்கு முந்திய 12 மாதங்களில் குறைந்தது 90 நாள்கள் அவர்கள் வேலையில் இருந்திருக்கவேண்டும்.

## அரசாங்கம் பணம் தரும் தந்தைக்கான அனுகூலங்கள்

- சுயதொழில் புரிவோர் உள்ளிட்ட தகுதிபெறும் வேலை செய்யும் தந்தையர் (தத்தெடுத்த தந்தை உள்பட), வேலை நிமித்தம் காரணமாக அரசாங்கம் பணம் தரும் தந்தைக்கான விடுப்புக்குத் தகுதி பெறாவிட்டால், அதற்கு ஈடான ரொக்கத் தொகையைப் பெற்றிடலாம். அதற்கு, அவர்கள் முறைப்படி தத்தெடுப்பைப் பதிவு செய்யும் தேதிக்கு முந்திய 12 மாதங்களில் குறைந்தது 90 நாள்கள் வேலையில் இருந்திருக்கவேண்டும்..

## அரசாங்கம் பணம் தரும் குழந்தைப் பராமரிப்பு விடுப்பு

- சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற 7 வயதுக்குக் குறைவான ஆக இளைய பிள்ளையைக் கொண்ட தகுதிபெறும் வேலை செய்யும் பெற்றோர், அரசாங்கம் பணம் தரும் குழந்தைப் பராமரிப்பு விடுப்பாக ஆண்டுக்கு 6 நாள்களைப் பெறுவர்.

## நீட்டிக்கப்பட்ட குழந்தைப் பராமரிப்பு விடுப்பு

- சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற 7 முதல் 12 வயதுடைய ஆக இளைய பிள்ளையைக் கொண்ட தகுதிபெறும் வேலை செய்யும் பெற்றோர், நீட்டிக்கப்பட்ட குழந்தைப் பராமரிப்பு விடுப்பாக ஆண்டுக்கு 2 நாள்களைப் பெறுவர்.
- இரு வயதுப் பிரிவுகளிலும் பிள்ளைகள் இருந்தால் (அதாவது, 7 வயதுக்குக் குறைவான பிள்ளையும், 7 முதல் 12 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளையும்), ஒவ்வொரு பெற்றோரும் ஓர் ஆண்டில் மொத்தமாக அதிகபட்சம் 6 நாட்கள் விடுப்பு எடுக்கலாம்.

## சம்பளமில்லாக் கைக்குழந்தைப் பராமரிப்பு விடுப்பு

- சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற 2 வயதுக்கும் குறைவான பிள்ளையைக் கொண்ட தகுதிபெறும் வேலை செய்யும் பெற்றோர், குழந்தைக்கு 2 வயதாகும் வரையில், ஆண்டுக்கு 6 நாள்கள் சம்பளமில்லாக் கைக்குழந்தைப் பராமரிப்பு விடுப்பைப் பெறத் தகுதிபெறுவர். 1 ஜனவரி 2024 முதல், தகுதிபெறும் பெற்றோர் ஒவ்வொருவருக்கும் சம்பளமில்லாக் கைக்குழந்தைப் பராமரிப்பு விடுப்பு ஆண்டுக்கு மேலும் 6 நாள்கள் அதிகரிக்கப்படும். ஆக, ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைக்கு 2 வயதாகும் வரையில், ஆண்டுக்கு 12 நாள்கள் சம்பளமில்லாக் கைக்குழந்தைப் பராமரிப்பு விடுப்பைப் பெறலாம்.



**அரசாங்கம் பணம் தரும் விடுப்புத் திட்டங்கள்: 1800 253 4757**
**www.profamilyleave.msf.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

ASK Kopi Kakis
GOVERNMENT POLICIES MADE SIMPLE

People's Association

# உங்களது வாழ்க்கைச் செலவுகளுக்கு உதவி பெறுங்கள்

# Pg 25 - 32

இந்தப் பகுதியில், அன்றாடச் செலவுகளைச் சமாளிக்க உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உதவும் பல்வேறு திட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்:

- பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு
- சமூக சுகாதார உதவித் திட்டம்
- கொம்கேர்






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# நல்வாழ்வு

*உங்களது வாழ்க்கைச் செலவுகளுக்கு உதவி பெறுங்கள்*

## சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி

- வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகளில் வசிக்கும் தகுதிபெறும் சிங்கப்பூர்க் குடும்பங்கள், தங்களுடைய வீட்டு வகையைப் பொறுத்து ஒவ்வோர் ஆண்டும், 1.5 முதல் 3.5 மாதம் வரையிலான சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகளைப் பெறுவர்.

| வீவக வீட்டு வகை | கட்டணத் தள்ளுபடி கிடைக்கும் மாதங்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | ஜனவரி | ஏப்ரல் | ஜூலை | அக்டோபர் | ஓராண்டில் மொத்தம் |
| 1 மற்றும் 2 அறை வீடு | 0.5 | 1 | 1 | 1 | 3.5 |
| 3 மற்றும் 4 அறை வீடு | 0.5 | 1 | 0.5 | 0.5 | 2.5 |
| 5 அறை வீடு | 0.5 | 0.5 | 0.5 | 0.5 | 2.0 |
| எக்சிகியூட்டிவ் / பல தலைமுறை வீடு | - | 0.5 | 0.5 | 0.5 | 1.5 |

**சேவை, பராமரிப்புக் கட்டணங்கள் பற்றி விவரம் கேட்டறிய, தயவுசெய்து உங்களது நகர மன்றத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்: 1800 866 3078**
**www.hdb.gov.sg**

**நிதி அமைச்சு: 1800 222 2888**
**www.mof.gov.sg**



## பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு – ரொக்கத் தொகை

- குறைந்த வருமானம் ஈட்டும் தகுதிபெறும் சிங்கப்பூரர்களின் உடனடித் தேவைகளுக்கு ரொக்கத் தொகை வழங்குகிறது.
- 2023இல், ரொக்கத் தொகை $350 வரை மேலும் அதிகரிக்கப்படும்.

| வரிவிதிப்புக்குரிய வருமானம் $34,000 மற்றும் அதற்குக் குறைவாகவுள்ள 21 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள சிங்கப்பூரர்கள் | 0 முதல் 1 சொத்து வரை உடையவர்கள் | |
|---|---|---|
| | ஆண்டு மதிப்பு ≤ $13,000 | $13,000 < ஆண்டு மதிப்பு ≤ $21,000 |
| பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - ரொக்கம் (2022இல்) | $400 | $250 |
| பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - ரொக்கம் (2023இல்) | $700 | $350 |
| பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - ரொக்கம் (2024இல்) | $850 | $450 |

**பொருள், சேவை வரி பற்றுச்சீட்டுக் குழு: 1800 222 2888**
**www.gstvoucher.gov.sg**

## பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு – யு-சேவ், உத்தரவாதத் தொகுப்புத்திட்ட யு-சேவ், வாழ்க்கைச் செலவின யு-சேவ்

- வீவக வீடுகளில் வசிக்கும் தகுதிபெறும் சிங்கப்பூர்க் குடும்பங்களின் பயனீட்டுக் கட்டணச் செலவைக் குறைக்க யு-சேவ் உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.
- உத்தரவாதத் தொகுப்புத்திட்ட யு-சேவ், 2023 வாழ்க்கைச் செலவின யு-சேவ் சிறப்புத் தொகை ஆகியவற்றுடன், தகுதிபெறும் குடும்பங்கள் தங்களுக்கு வழக்கமாகக் கிடைக்கும் பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு-சேவ் தள்ளுபடிகளைவிட ஒரு மடங்கு அதிகமாக 2023இல் பெறுவர்.

| வீவக வீட்டின் வகை | பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு-சேவ் | உத்தரவாதத் தொகுப்புத்திட்ட யு-சேவ் & வாழ்க்கைச் செலவின யு-சேவ் | மொத்த பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு - யு-சேவ் (2023) |
|---|---|---|---|
| | 2023 இல் நான்கு தவணைகளாக ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களில் | | |
| 1 மற்றும் 2 அறை வீடு | **$380** | **$380** | **$760** |
| 3 அறை வீடு | **$340** | **$340** | **$680** |
| 4 அறை வீடு | **$300** | **$300** | **$600** |
| 5 அறை வீடு | **$260** | **$260** | **$520** |
| எக்சிகியூட்டிவ் / பல தலைமுறை வீடு | **$220** | **$220** | **$440** |



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## உத்தரவாதத் தொகுப்புத்திட்டக் குழு:

- **ரொக்க வழங்குதொகை:**
  21 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள சிங்கப்பூரர்கள், அவர்களது வருமானத்தையும் சொத்துரிமையையும் பொறுத்து, 2022 – 2026 ஆண்டுகளில் $700 முதல் $2,450 வரையிலான ரொக்க வழங்குதொகைகள் பெறுவார்கள்.

| வழங்குதொகை வழங்கப்படும் ஆண்டில் 21 வயதுக்கு மேற்பட்ட சிங்கப்பூரர்கள் | வழங்கப்படும் காலகட்டம் | 0 to 1 சொத்துகளின் உரிமையாளர் | | | 1க்கு மேற்பட்ட சொத்துகளின் உரிமையாளர் |
|---|---|---|---|---|---|
| | | வரிவிதிப்புக்குரிய வருமானம் (AI) | | | |
| | | AI ≤ $34,000 | $34,000 < AI ≤ $100,000 | AI > $100,000 | |
| 2023 | டிசம்பர் 2022 | $200 | $150 | $100 | $100 |
| 2024 | டிசம்பர் 2023 | $800 | $500 | $200 | $200 |
| 2025 | டிசம்பர் 2024 | $600 | $350 | $200 | $200 |
| 2026 | டிசம்பர் 2025 | $600 | $350 | $100 | $100 |
| 2027 | டிசம்பர் 2026 | $250 | $150 | $100 | $100 |
| மொத்தம் | | $2,450 | $1,500 | $700 | $700 |

- **மெடிசேவ் நிரப்புத்தொகை:**
  20 வயது மற்றும் அதற்குக் குறைவான வயதுடைய அல்லது 55 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சிங்கப்பூரர்கள், 2023 முதல் 2025 வரை ஆண்டுதோறும் $150 மெடிசேவ் நிரப்புத்தொகை பெறுவார்கள்.

| நிரப்புத்தொகை வழங்கப்படும் ஆண்டில் சிங்கப்பூரரின் வயது | 20 வயது மற்றும் அதற்குக் குறைவு | 55 வயது மற்றும் அதற்கு மேல் |
|---|---|---|
| 2023 | $150 | |
| 2024 | $150 | |
| 2025 | $150 | |
| **மொத்தம்** | **$450** | |

**உத்தரவாதத் தொகுப்புத்திட்டக் குழு: 1800 2222 888**
**go.gov.sg/assurancepackage**

## சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுத் திட்டம் 2023

- 2023 ஜனவரி மாதத்திலிருந்து, ஒவ்வொரு சிங்கப்பூர்க் குடும்பமும் $300 மதிப்புள்ள சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகளில் $150 மதிப்புள்ள பற்றுச்சீட்டுகளை பங்கேற்கும் குடியிருப்பு வட்டாரக் கடைகள், உணவங்காடி நிலையங்கள் ஆகியவற்றிலும், மீதமுள்ள $150 மதிப்புள்ள பற்றுச்சீட்டுகளை பங்கேற்கும் பேரங்காடிகளிலும் 31 டிசம்பர் 2023 வரை பயன்படுத்தலாம்.
- 2024 ஜனவரி மாதத்தில், ஒவ்வொரு சிங்கப்பூர்க் குடும்பமும் $500 மதிப்புள்ள சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகளை மீண்டும் பெறுவர்.

## 2023 வாழ்க்கைச் செலவினச் சிறப்புத் தொகை

- மதிப்பீட்டுக்குரிய வருமானம், சொத்துரிமை ஆகியவற்றைப் பொறுத்து, 21 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு சிங்கப்பூரரும் 2023 ஜூன் மாதம் $200 முதல் $400 வரை பெறுவர்.

| வரிவிதிப்புக்குரிய வருமானம் (AI) | 2023ல் 21 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சிங்கப்பூரர்கள் |
|---|---|
| | 0 முதல் 1 சொத்து வரை உடையவர்கள் |
| AI ≤ $22,000 | $400 |
| $22,000 < AI ≤ $34,000 | $300 |
| $34,000 < AI ≤ $100,000 | $200 |

## பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு, எடுசேவ் கல்விச்சேமிப்புக் கணக்கு, உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கு ஆகியவற்றுக்கான 2023 நிரப்புத்தொகைகள்

- 6 வயதுக்கும் குறைவான சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் 2023 செப்டம்பர் முதல், ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் $400 நிரப்புத்தொகை பிள்ளை மேம்பாட்டுக் கணக்கில் கிடைக்கப்பெறும்.
- 7 முதல் 20 வயதுக்கு உட்பட்ட சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் 2023 மே மாதத்தில், ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் $300 நிரப்புத்தொகை எடுசேவ்கல்விச்சேமிப்புக் கணக்கிலும் உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கிலும்கிடைக்கப் பெற்றிருக்கும்.

| 2023இல் சிங்கப்பூரரின் வயத | நிரப்புத்தொகை பெறும் கணக்கு | தொகை | உத்தேசக் காலகட்டம் |
|---|---|---|---|
| 0 - 6 வயது | பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு | $400 | 2023 செப்டம்பர் முதல் |
| 7 - 16 வயது | எடுசேவ் கல்விச்சேமிப்புக் கணக்கு | $300 | மே 2023 |
| 17 - 20 வயது | உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கு | $300 | மே 2023 |



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## மெடிசேவ்500 மற்றும் மெடிசேவ்700

- ஒவ்வொரு நோயாளியும், நாட்பட்ட நோயைச் சமாளித்தல் திட்டத்தின்கீழ் இடம்பெறும் நாட்பட்ட நோய்களுக்கான வெளிநோயாளி சிகிச்சைகளுக்கும், அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கும், சுகாதாரப் பரிசோதனைகளுக்கும் மெடிசேவ் கணக்கிலிருந்து ஆண்டுக்கு $500 அல்லது $700 (சிக்கலான நாட்பட்ட நோய் பிரச்சனைகள் உள்ளவர்களுக்கு) வரை எடுக்கலாம்.

## தடுப்பூசி நிதி உதவிகள்

- தகுதிபெறும் சிங்கப்பூரர்கள், தேசிய அளவில் பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகளை CHAS தனியார் மருந்தகங்களில் போட்டுக்கொள்ள $35 முதல் $125 வரை நிதி உதவி பெறலாம்.
- பெரியவர்களுக்கான தேசிய தடுப்பூசித் திட்டத்தின்கீழ், தகுதிபெறும் சிங்கப்பூரர்கள் பலதுறை மருந்தகங்களில் தடுப்பூசிகள் போட்டுக்கொள்ள 75% வரை நிதி உதவி பெறலாம். முன்னோடி, மெர்டேக்கா தலைமுறையினர் கூடுதல் நிதி உதவி பெறுவார்கள்.

## இளம்பருவ வளர்ச்சிப் பரிசோதனைக்கான நிதி உதவிகள்

- உள்ளூர் வழிகாட்டிகளின்படி பரிந்துரைக்கப்படும் இளம்பருவ வளர்ச்சிப் பரிசோதனைக்குச் செல்லும் 0 முதல் 6 வயதுடைய சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தைகளுக்கு இந்த நிதி உதவிகள் கிடைக்கும்.
- தகுதிபெறும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தைகள், CHAS தனியார் மருந்தகங்களிலும் பலதுறை மருந்தகங்களிலும், பரிந்துரைக்கப்படும் ஏழு இளம்பருவ வளர்ச்சிப் பரிசோதனைகளுக்கும் முழு நிதி உதவி பெறலாம்.

**சுகாதார அமைச்சு: 6325 9220**
**www.moh.gov.sg**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

COMMUNITY HEALTH ASSIST SCHEME

CHAS

## சமூக சுகாதார உதவித் திட்டம்

- சிங்கப்பூர் குடிமக்கள் தங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள பங்குபெறும் தனியார் மருந்தகங்களிலும் பல் சிகிச்சை மருந்தகங்களிலும் மருத்துவ, பல் மருத்துவ சிகிச்சைகளுக்குக் கட்டணச்சலுகைகள் பெறலாம்.
- சிங்கப்பூரர்கள் இப்போது www.chas.sg இணையத்தளத்தின் வாயிலாக இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

| CHAS விதிகள் | CHAS பச்சை அட்டை (நவம்பர் 2019-யிலிருந்து) | CHAS ஆரஞ்சு அட்டை | CHAS நீல அட்டை |
|---|---|---|---|
| தனிநபர் மாதாந்திர குடும்ப வருமானம் (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,000க்கு மேல் | $1,201 - $2,000 | $1,200 மற்றும் அதற்கும் குறைவு |
| வீட்டின் ஆண்டு மதிப்பு (AV) (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு) | $21,000க்கு மேல் | $13,001 - $21,000 | $13,000 மற்றும் அதற்கும் குறைவு |
| **CHAS கட்டணச்சலுகைகள்** | | | |
| சாதாரண நோய்கள்* (எ.கா. இருமல், சளி) | பொருந்தாது | ஒவ்வொரு வருகைக்கும் $10 வரையிலான கட்டணச்சலுகை | ஒவ்வொரு வருகைக்கும் $18.50 வரையிலான கட்டணச்சலுகை |
| குறிப்பிட்ட நாட்பட்ட நோய்கள்^ — சிக்கலற்றது | ஒவ்வொரு வருகைக்கும் $28 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $112 | ஒவ்வொரு வருகைக்கும் $50 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $200 | ஒவ்வொரு வருகைக்கும் $80 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $320 |
| குறிப்பிட்ட நாட்பட்ட நோய்கள்^ — சிக்கலானது | ஒவ்வொரு வருகைக்கும் $40 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $160 | ஒவ்வொரு வருகைக்கும் $80 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $320 | ஒவ்வொரு வருகைக்கும் $125 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $500 |
| குறிப்பிட்ட பல் மருத்துவச் சேவைகள் | பொருந்தாது | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $50 முதல் $170.50 வரையிலான கட்டணச்சலுகை (செயற்கைப் பல்வரிசை, பற்சிகரம், பல்வேர்க்குழி சிகிச்சை ஆகியவற்றுக்கு மட்டுமே) | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $11 முதல் $256.50 வரையிலான கட்டணச்சலுகை (செயற்கைப் பல்வரிசை, பற்சிகரம், பல்வேர்க்குழி சிகிச்சை ஆகியவற்றுக்கு மட்டுமே) |

**நோய்த்தடுப்பு சுகாதார நிதி உதவிகள்**

| | தகுதிபெறும் சிங்கப்பூரர்கள்/ CHAS பச்சை அட்டை | மெர்டேக்கா தலைமுறை, CHAS நீலம் அல்லது ஆரஞ்சு அட்டை | முன்னோடித் தலைமுறை |
|---|---|---|---|
| "Screen for Life" திட்டத்தின்கீழ் பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரப் பரிசோதனை** | நிலையான கட்டணம் $5 ஒரு வருகைக்கு | நிலையான கட்டணம் $2 ஒரு வருகைக்கு | $0 |

* *சமூக சுகாதார உதவித் திட்டம் நடைமுறையில் உள்ள அனைத்து தனியார் மருந்தகங்களிலும், பொதுவான நோய்களுக்கு ஓராண்டில் ஒரு நோயாளிக்கு அதிகபட்சம் 24 வருகைகள்.*

** *சமூக சுகாதார உதவித் திட்டம் நடைமுறையில் உள்ள தனியார் மருந்தகங்களில் மேற்கொள்ளப்படும் இதய நோய் சார்ந்த பரிசோதனைகள் (அதாவது நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், உயர் இரத்தக் கொழுப்பு), பெருங்குடல் புற்றுநோய்ப் பரிசோதனை, கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனை ஆகியவற்றை இது குறிக்கிறது. வாழ்நாளுக்கான பரிசோதனைத் திட்டத்தின்கீழ் மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை சேவைகள் குறிப்பிட்ட பலதுறை மருந்தகங்களில் பின்வரும் கட்டணங்களில் வழங்கப்படுகின்றன: முன்னோடித் தலைமுறையினருக்கு $25, மெர்டேக்கா தலைமுறையினருக்கு $37.50, சிங்கப்பூர்க் குடிமக்களுக்கு $50. மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்திற்குப் பதிவு செய்த தகுதிபெறும் சிங்கப்பூர்க் குடிமக்களுக்கு, அவர்கள் தேர்ந்தெடுத்த மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி மருந்தகத்தில், வாழ்நாளுக்கான பரிசோதனைத் திட்டத்தின்கீழ் தேசிய அளவில் பரிந்துரைக்கப்படும் பரிசோதனைகள் முழு மானியத்துடன் வழங்கப்படும்.*

^ *"சிக்கலற்றது" என்பது ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது. "சிக்கலானது" என்பது பற்பல நாட்பட்ட நோய்களுக்காக, அல்லது பல்வேறு சிக்கல்கள் உள்ள ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது.*

*பல் சிகிச்சைக்கான நிதி உதவிகளின் முழுமையான விவரங்களை www.chas.sg இணையப்பக்கத்தில் காணலாம்.*

**CHAS நேரடித் தொலைபேசி சேவை: 1800 275 2427**
**www.chas.sg**

## கொம்கேர் இடைக்கால உதவித் திட்டம்

ComCare

- மூன்று மாதங்களுக்கும் குறைவான காலத்திற்கு அவசரமாக உடனடி உதவி தேவைப்படும் சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும் இத்திட்டம் உதவி வழங்குகிறது.
- குடும்பத்தின் மாத வருமானம் $1,900 அல்லது அதைவிடக் குறைவாகவோ, அல்லது குடும்பத்தின் தனிநபர் சராசரி வருமானம் மாதத்திற்கு $650 அல்லது அதைவிடக் குறைவாகவோ இருப்பவர்கள் இந்த உதவியைப் பெறலாம்.

## கொம்கேர் குறுகியகால – இடைக்கால உதவித் திட்டம்

- வேலை தேடும் அல்லது நோயினாலோ பராமரிப்பளிக்கும் பொறுப்புகளாலோ தற்காலிகமாக வேலை செய்ய இயலாத சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும் இத்திட்டம் உதவி வழங்குகிறது.
- குடும்பத்தின் மாத வருமானம் $1,900 அல்லது அதைவிடக் குறைவாகவோ, அல்லது குடும்பத்தின் தனிநபர் சராசரி வருமானம் மாதத்திற்கு $650 அல்லது அதைவிடக் குறைவாகவோ இருப்பவர்கள் இந்த உதவியைப் பெறலாம்.

## கொம்கேர் நீண்டகால உதவித் திட்டம்

- நோயினால், முதுமையால் அல்லது உடற்குறையால் நிரந்தரமாக வேலை செய்ய இயலாததோடு, அன்றாடத் தேவைகளுக்கு மிகக் குறைவான அல்லது அறவே குடும்ப ஆதரவோ, சேமிப்போ, சொத்துகளோ இல்லாத சிங்கப்பூர் குடிமக்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும் இத்திட்டம் உதவி வழங்குகிறது.
- தகுதிபெறும் குடும்பங்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவி:

| குடும்பத்தின் அளவு | உதவித்தொகை |
|---|---|
| ஒருவர் | **$640** |
| இருவர் | **$1,080** |
| மூவர் | **$1,510** |
| நால்வர் | **$1,930** |

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு (கொம்கேர்): 1800 222 0000**
**www.msf.gov.sg/comcare**

## பெரியவர்களுக்கான போக்குவரத்து சலுகைகள்

- பெரியவர்கள் (சிங்கப்பூர் குடிமக்களும் நிரந்தரவாசிகளும்) மாதத்திற்கு $128 கட்டணத்தில் மாதப் பயண அட்டையை வாங்கிக்கொள்ளலாம்.

**SimplyGo: 1800 2255 663**
**www.simplygo.com.sg**

## வெளிநாட்டு இல்லப் பணியாளர் தீர்வை சலுகை

- ஒரே வீட்டில் வசிக்கும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பின்வருவோரைப் பராமரிக்க வெளிநாட்டு இல்லப் பணியாளரை வேலைக்கு எடுக்கும் குடும்பங்கள் மாதத்திற்கு $60 சலுகை தீர்வையுடன் பயனடையலாம்:
  - 16 வயதுக்குக் குறைவான பிள்ளை; அல்லது
  - குறைந்தது 67 வயதுடைய முதியோர்; அல்லது
  - அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் குறைந்தது ஒன்றைச் செய்வதற்கு உதவி தேவைப்படும் இயலாமைகள் உள்ளவர்.

**மனிதவள அமைச்சு: 6438 5122**
**www.mom.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# இயலாமை உள்ள பெரியவர்களுக்கு ஆதரவு Pg 33 - 38



இயலாமை உள்ளவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு ஆதரவளிக்க ஏராளமான உதவிகள் உள்ளன. அவை பற்றி இந்தப் பகுதியில் மேலும் தெரிந்து கொள்ளுங்கள்:

- இல்லம் சார்ந்த பராமரிப்புச் சேவைகள்
- கேர்ஷீல்டு லைஃப்
- மெடிசேவ் கேர்

நன்றி கென்! எனக்குத் தேவையான உதவி இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்!





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# இயலாமை உள்ள பெரியவர்களுக்கு ஆதரவு

## இயலாமை உள்ளோருக்கான சலுகை அட்டை

- பெரியவர்களுக்கான பொதுப் போக்குவரத்துக் கட்டணங்களுக்கு 60% வரை தள்ளுபடி. இவர்கள் 7.2 கிலோமீட்டருக்கு மேலான தூரம் பயணம் செய்வதற்குக் கூடுதல் கட்டணம் கிடையாது.
- இவர்கள் பேருந்திலும் ரயிலிலும் எண்ணற்ற பயணங்கள் செய்ய, $64 விலைக்கு மாதச் சலுகை அட்டையும் வாங்கலாம்.

**SimplyGo: 1800 2255 663**
**www.simplygo.com.sg**

## இயலச்செய்யும் போக்குவரத்து நிதி உதவி

- ஏற்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிரத்யேக போக்குவரத்தின் செலவுக்கு 80% வரை நிதி உதவி பெறலாம்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**

## டாக்சி நிதி உதவித் திட்டம்

- பள்ளிக்கு, வேலைக்கு அல்லது வேலை தொடர்பான பயிற்சிக்கு செல்ல டாக்சிகளையே முழுமையாகச் சார்ந்திருக்கும் இயலாமை உள்ளவர்களுக்கான திட்டம் இது.
- குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,800 மற்றும் அதைவிடக் குறைவாக உள்ளவர்கள் இத்திட்டத்திற்குத் தகுதி பெறுவார்கள்.
- குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானத்தையும், வீட்டிலிருந்து பள்ளிக்கு/வேலைக்கு/பயிற்சிக்குப் பயணம் செய்யும் தூரத்தையும் பொறுத்து, 80% வரை நிதி உதவி பெறலாம்.

## துணைபுரியும் தொழில்நுட்ப நிதி

- பண வசதிச் சோதனைவழி, வாழ்நாள் முழுமைக்கும் அதிகபட்சம் $40,000 என்ற உச்சவரம்பு அடிப்படையில், இயலாமை உள்ளோருக்குத் தேவைப்படும் துணைபுரியும் தொழில்நுட்பச் சாதனங்களுக்கான செலவுக்கு 90% வரையிலான நிதியுதவிகள்

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## இல்லப் பராமரிப்புக்கான மானியம்

- அன்றாட வாழ்க்கையின் மூன்றுக்கும் மேற்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறிது உதவி* தேவைப்படுவோரின் பராமரிப்புச் செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு, தகுதிபெறுவோர் மாதந்தோறும் $400 வரை பெறலாம்.


** குளி த்தல் , உடுத்துதல், சாப்பி டுதல், கழிவறைக் குச் செல் லுதல், நடத்தல் , ஓரிடத்திலி ருந்து மற்றோர் இடத்திற் கு நகருதல்*

**ஒருங்கிணை ந்த பராமரிப்பு அமை ப்பு: 1800 650 6060**
**www.aic.sg**

## இல்லம் சார்ந்த பராமரிப்புச் சேவைகள்

- இயலாமை உள்ள பெரியவர்களைக் கூடுமானவரை சமூகத்திலேயே வைத்திருக்கும் இலக்குடன், மாற்றுப் பராமரிப்பு ஆதரவு வழங்கப்படுகிறது.
- சேவைகளில் சிகிச்சை, தனிநபர் சுகாதாரப் பராமரிப்பு, வீட்டுப் பராமரிப்பு, மருந்து மாத்திரைக்கான நினைவுறுத்தல்கள், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான திறன் சார்ந்த பயிற்சி ஆகியவை அடங்கும்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.sgenable.sg**



## எல்டர்ஷீல்டு

- 1970 முதல் 1979 வரை பிறந்த, கடுமையான இயலாமைகள் இல்லாத ‘எல்டர்ஷீல்டு 400 பாலிசிதாரர்கள், தானாகவே ‘கேர்ஷீல்டு லைஃப்’ திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**மத்திய சேம நிதி: 1800 227 1188**
**go.gov.sg/cpfeldershield**

**சுகாதார அமைச்சு: 6325 9220**
**go.gov.sg/moheldershield**

## கேர்ஷீல்டு லைஃப்

- சிங்கப்பூர்க் குடிமக்களும் நிரந்தரவாசிகளும் கடுமையான இயலாமைப் பிரச்சினைக்கு ஆளாகி (குறிப்பாக, முதுமைக் காலத்தில்), நீண்டகாலத்திற்குத் தனிப்பட்ட, மருத்துவப் பராமரிப்பு தேவைப்படும் நிலையில், அடிப்படை நிதி ஆதரவு வழங்கும் நீண்டகாலக் காப்புறுதித் திட்டம்.
  - 1980ல் அல்லது அதற்குப் பிற்பாடு பிறந்தவர்கள், 1 அக்டோபர் 2020 முதல், அல்லது 30 வயதை எட்டும்போது, தானாகவே மெடிஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள்.
  - 1979 அல்லது அதற்கு முன் பிறந்தவர்கள், கடுமையான இயலாமைப் பிரச்சினை இல்லாவிடில், கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்ந்துகொள்ளலாம்.
- கேர்ஷீல்டு லைஃப் மேம்பட்ட பாதுகாப்பும் மன நிம்மதியும் அளிக்கிறது:
  - பாலிசிதாரருக்குக் கடுமையான இயலாமைகள் இருக்கும் வரை, வாழ்நாள் முழுவதும் ரொக்க வழங்குதொகைகள் வழங்கப்படும்.

**சுகாதார அமைச்சு: 1800 222 3399**
**www.careshield.gov.sg**

## எல்டர்ஃபண்டு

- கேர்ஷீல்டு லைஃப், எல்டர்ஷீல்டு லைஃப், மூத்தோருக்கான இடைக்கால இயலாமை உதவித் திட்டம் ஆகியவற்றின்மூலம் பயன்பெற இயலாத, நீண்டகாலப் பராமரிப்புத் தேவைகளுக்குப் போதுமான மெடிசேவ் சேமிப்பும் தனிப்பட்ட சேமிப்பும் இல்லாத, 30 வயதுக்கும் மேற்பட்ட, கடுமையான இயலாமைப் பிரச்சினை கொண்ட, குறைந்த வருமானச் சிங்கப்பூரர்களுக்கு ஆதரவளிக்கிறது.

**ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு: 1800 650 6060**
**go.gov.sg/elderfund**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## மெடிசேவ் கேர்

- 30 வயதுக்கும் மேற்பட்ட, கடுமையான இயலாமைப் பிரச்சினை கொண்ட சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் தங்களுடைய நீண்டகாலப் பராமரிப்புத் தேவைகளுக்காக மாதந்தோறும் பணம் எடுத்துக்கொள்ளலாம்.
- இவர்கள் தங்களது மெடிசேவ் இருப்புத்தொகையைப் பொறுத்து, சொந்தக் கணக்கிலிருந்து மற்றும்/அல்லது வாழ்க்கைத்துணையின் மெடிசேவ் கணக்கிலிருந்து $200 வரை (மொத்தமாக) எடுத்துக் கொள்ளலாம்.

| மெடிசேவ் இருப்புத்தொகை | ஒவ்வொரு மாதமும் எடுக்கக்கூடிய தொகை |
|---|---|
| $20,000 மற்றும் அதற்குமேல் | $200 |
| $15,000 மற்றும் அதற்குமேல் | $150 |
| $10,000 மற்றும் அதற்குமேல் | $100 |
| $5,000 மற்றும் அதற்குமேல் | $50 |
| $5,000க்கும் குறைவு | எதுவுமில்லை |

**மத்திய சேம நிதிக் கழகம்: 1800 227 1188**
**www.cpf.gov.sg**

**சுகாதார அமைச்சு: 1800 222 3399**
**www.moh.gov.sg**

## உடற்குறை உள்ளவர்களுக்கான எஸ்ஜி ஒற்றுமை வேலைகள், திறன்கள் திட்டங்கள்

- இரண்டு திட்டங்களுடன் உடற்குறை உள்ளவர்களுக்கு வேலை, மற்றும் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.
  - பணியமர்த்தி பயிற்சியளிக்கும் திட்டம்: உடற்குறை உள்ளவர்கள் முதலாளிகளிடம் பணியமர்த்தப்படுவார்கள். புதிய முழுநேர வேலைகளை அல்லது ஒப்பந்தக்கால வேலைகளைச் செய்ய அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். முதலாளிகள் அரசாங்கத்திடமிருந்து 90% சம்பள ஆதரவு பெறுவார்கள்.
  - வேலை அனுபவப் பயிற்சித் திட்டம்: உடற்குறை உள்ளவர்களுக்கு நிறுவனங்களில் வேலை அனுபவப் பயிற்சி அளிக்கப்படும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் படித்தொகைக்கு அரசாங்கம் மானியம் வழங்கும்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**go.gov.sg/opendoorprogramme**






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# கூடுதல் ஆதரவை அனுபவிக்கலாம்


# Pg 38 - 41

நீங்கள் தகுதி பெறக்கூடிய வரி நிவாரணங்களும் கழிவுகளும் பற்றி இந்தப் பகுதியில் தெரிந்து கொள்ளுங்கள்:

- பெற்றோர் நிவாரணம் / தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / வாழ்க்கைத்துணை நிவாரணம்
- வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி நிவாரணம்
- பராமரிப்பளிக்கும் தாத்தா பாட்டியர் நிவாரணம்



வணக்கம் கென், எங்களைப் போன்ற வேலை செய்யும் பெற்றோர்களுக்கு என்ன ஆதரவு இருக்கிறது?





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# கூடுதல் ஆதரவை அனுபவிக்கலாம்

## *வரி நிவாரணங்களும் தள்ளுபடிகளும்**

* தனிநபர் வருமான வரிக்கான நிவாரண உச்சவரம்பாக அறிவிக்கப்பட்டுள்ள $80,000, ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டிலும் பெறப்படும் ஒட்டுமொத்த வரி நிவாரணங்களை உள்ளடக்கும்.

### பெற்றோருக்கான நிவாரணம் / உடற்குறையுள்ள பெற்றோருக்கான நிவாரணம்

- தனிநபர்கள் தங்கள் பெற்றோர், தாத்தா-பாட்டி, வாழ்க்கைத்துணையின் பெற்றோர், வாழ்க்கைத்துணையின் தாத்தா-பாட்டி ஆகியோரை ஆதரிப்பதன் பேரில் $5,500 அல்லது $9,000* வரி நிவாரணம் பெறலாம். ஆனால், அவ்வாறு அவர்களைச் சார்ந்திருப்போர் முந்திய ஆண்டில் $4,000 க்கு அதிகமான ஆண்டு வருமானத்தைக் கொண்டிருக்கக் கூடாது.
- தனிநபர்கள் தங்களைச் சார்ந்திருப்போர் இயலாமை உள்ளவர்களாக இருந்தால் $10,000 அல்லது $14,000* வரி நிவாரணம் பெறலாம். தனிநபர்கள் தங்களுக்கிடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட பங்கீட்டு முறையின் பேரில் நிவாரணத் தொகையைப் பகிர்ந்துகொள்ளலாம்.

**அவர்கள் ஒரே வீட்டில் வசித்து வந்தால்.*

### உடற்குறையுள்ள சகோதர சகோதரிக்கான நிவாரணம்

- நீங்கள் இயலாமை உள்ள உடன்பிறந்தோரை அல்லது வாழ்க்கைத்துணையின் உடன்பிறந்தோரை ஆதரிக்க, முந்திய ஆண்டில் குறைந்தது $2,000 செலவு செய்திருந்தால், ஒருவருக்கு $5,500 வரி நிவாரணம் பெறலாம்.
- தனிநபர்கள் தங்களுக்கிடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட பங்கீட்டு முறையின் பேரில் நிவாரணத் தொகையைப் பகிர்ந்துகொள்ளலாம்.

### வாழ்க்கைத் துணைக்கான நிவாரணம் / உடற்குறையுள்ள வாழ்க்கைத் துணைக்கான நிவாரணம்

- நீங்கள், உங்களுடைய வாழ்க்கைத்துணை முந்திய ஆண்டில் $4,000க்கு அதிகமான ஆண்டு வருமானத்தைக் கொண்டிராவிட்டால் $2,000 வரி நிவாரணமும், அவர் இயலாமை உள்ளவராக இருந்தால் $5,500 வரி நிவாரணமும் பெறலாம்.

### ஆயுள் காப்புறுதி நிவாரணம்

- 2022ஆம் ஆண்டில் கட்டாய மத்திய சேம நிதிப் பங்களிப்பு, கட்டாய மெடிசேவ் பங்களிப்பு / சுய விருப்பத்தின் பேரிலான மத்திய சேம நிதிப் பங்களிப்பு ஆகியவை மொத்தமாக $5,000க்கும் குறைவாக உள்ள, 2022ஆம் ஆண்டில் தனது / வாழ்க்கைத் துணையின் ஆயுள் காப்புறுதித் திட்டத்திற்கான சந்தாக்களைச் செலுத்திய தனிநபர்களுக்குக் கிடைக்கும்.
- பின்வருபனவற்றில் குறைவான தொகையைக் கோரலாம்
  - $5,000 தொகைக்கும் மொத்த மத்திய சேம நிதிப் பங்களிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடு; அல்லது
  - உங்கள் / உங்கள் வாழ்க்கைத் துணையின் ஆயுள் காப்பீட்டின் மதிப்பில் 7% வரை; அல்லது
  - செலுத்தப்பட்ட காப்புறுதிச் சந்தாத் தொகை.

### துணை ஓய்வூதியத் திட்ட நிவாரணம்

- துணை ஓய்வூதியத் திட்டக் கணக்கில் தொகை நிரப்பும் சிங்கப்பூரர்கள் / நிரந்தரவாசிகள், நிரப்புத்தொகையின் அடிப்படையில், $15,300 வரையிலான நிவாரணத் தொகையைப் பெறலாம்.



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## மகப்பேறு வரிக் கழிவு

- திருமணமான, விவாகரத்தான அல்லது வாழ்க்கைத்துணையை இழந்த பெற்றோர்கள், பிள்ளையின் பிறப்பு வரிசையைப் பொறுத்து, $5,000 முதல் $20,000 வரையிலான வரி நிவாரணங்களைக் கோரலாம்.
- பிள்ளை, பிறந்தபோ து அல்லது பிறந்து 12 மாதத்திற்குள் சிங்கப்பூர்க் குடியுரிமை* பெற்றிருக்கவேண்டும்.
- தம்பதியர் தத்தம் வருமான வரிகளை ஈடுசெய்ய, மகப்பேறு வரிக் கழிவைப் பகிர்ந்துகொள்ளலாம்.

** வெளிநாட்டில் பிறந்த பிள்ளைகள், சிங்கப்பூர்க் குடியுரிமை பெறுவதற்கான காலகட்டம் உள்ளிட்ட தகுதி நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படும் பட்சத்தில், மகப்பேறு வரிக் கழிவுக்குத் தகுதிபெறலாம்.*

## தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / உடற்குறையுள்ள பிள்ளை நிவாரணம்

- 16 வயதுக்குக் குறைவான அல்லது முழுநேரம் படிக்கின்ற, முந்திய ஆண்டில் $4,000க்கு அதிகமான ஆண்டு வருமானத்தைக் கொண்டிராத பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் $4,000 வரி நிவாரணம் பெறலாம். இயலாமை உள்ள பிள்ளையைக் கவனித்துக்கொள்ளும் பெற்றோர், அத்தகைய ஒவ்வொரு பிள்ளைக்கும் $7,500 வரி நிவாரணம் பெறலாம்.
- பெற்றோர் தங்களுக்கிடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட பங்கீட்டு முறையின் பேரில் தகுதிபெறும் பிள்ளை / இயலாமை உள்ள பிள்ளை நிவாரணத் தொகையைப் பகிர்ந்துகொள்ளலாம்.

## வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி நிவாரணம்

- வேலை செய்யும் தாய்மார் (திருமணமானவர்கள், விவாகரத்து பெற்றவர்கள் அல்லது கணவரை இழந்தவர்கள்), குழந்தையின் பிறப்பு வரிசையைப் பொறுத்து, 1 ஜனவரி 2024 தேதிக்குமுன் பிறந்த அல்லது தத்தெடுக்கப்பட்ட தகுதிபெறும் சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற குழந்தைகளுக்கு, தங்கள் வருமானத்தில் 15% முதல் 25% வரி நிவாரணம் பெறலாம்.
- வேலை செய்யும் தாய்மார் 1 ஜனவரி 2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் பிறக்கும் அல்லது தத்தெடுக்கப்படும் தகுதிபெறும் குழந்தைகளுக்காகப் பெறும் வரி நிவாரணம், தகுதிபெறும் தாய்மாரின் சம்பளத்தில் ஒரு விழுக்காடாக இருக்கும் நிலை மாற்றப்பட்டு, ஒரு குறிப்பிட்ட தொகையாக வழங்கப்படும் (அதாவது, மதிப்பீட்டு ஆண்டு 2025 முதல்).
- இந்த நிவாரணத்துடன் தகுதிபெறும் பிள்ளை / உடற்குறையுள்ள பிள்ளை நிவாரணத்தையும் சேர்த்து, ஒவ்வொரு பிள்ளைக்கும் அதிகபட்சம் $50,000 நிவாரண வரம்பு உள்ளது.
- வேலை செய்யும் தாய்மாருக்கான வரி நிவாரணம் தொடர்பிலான மாற்றங்கள் குறித்த மேல்விவரங்கள்: go.gov.sg/mp2023enhanced-infographic.

## போர்க்காலப் படைவீரர் நிவாரணம் (தனக்கு, மனைவிக்கு, பெற்றோருக்கு)

- முந்திய பணி ஆண்டில் (அதாவது, ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை) தேசிய சேவை சார்ந்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டதா என்ற அடிப்படையில், தேசிய சேவையாளர்கள் $1,500 முதல் $5,000 வரையிலும், அவர்களின் மனைவிக்கும் பெற்றோரும் $750 தொகையும் வரி நிவாரணம் பெறலாம்

## வருமான நிவாரணம்

- முந்திய ஆண்டில், வேலை, ஓய்வூதியம் அல்லது வர்த்தகம்வழி நீங்கள் வரி மதிப்பீட்டுக்குரிய வருமானம் பெற்றிருந்தால், உங்கள் வயதைப் பொறுத்து, $1,000 முதல் $8,000 வரை வரி நிவாரணம் பெறலாம்.
- வேலை செய்யும் இயலாமை உள்ளோர் $4,000 முதல் $12,000 வரை, மேலும் அதிகமான வரி நிவாரணம் பெறலாம்.



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

### பயிற்சிக் கட்டண நிவாரணம்

- திறன்களையும் வேலைத்தகுதியையும் மேம்படுத்திக் கொள்வதற்காகப் பங்கெடுத்த பயிற்சி வகுப்புகளுக்கு வரி நிவாரணம் கிடைக்கும்.
- நீங்கள் கலந்துகொண்ட பயிற்சிகள், கருத்தரங்குகள் அல்லது மாநாடுகளின் எண்ணிக்கை பாராமல், ஒவ்வோர் ஆண்டும் செலுத்தப்பட்ட பயிற்சிக் கட்டணங்களுக்கு $5,500 வரை நிவாரணம் கோரலாம்.

### மத்திய சேம நிதி ரொக்க நிரப்புத்தொகை நிவாரணம்

- உங்கள் மத்திய சேம நிதி சிறப்பு / ஓய்வுக்கால / மெடிசேவ் கணக்கில் அல்லது உங்கள் அன்புக்குரியவர்களின் மத்திய சேம நிதிக் கணக்குகளில் தொகை நிரப்புவதற்கு.
- ஒவ்வோர் ஆண்டும் $16,000 வரையிலான நிவாரணம் பெறலாம் (தனக்கு அதிகபட்சம் $8,000, குடும்ப உறுப்பினர்களுக்கு* அதிகபட்சம் $8,000).

** தொகை நிரப்பும் ஆண்டுக்கு முந்திய ஆண்டில் வாழ்க்கைத்துணை / உடன்பிறந்தோர் $4,000க்கு அதிகமான ஆண்டு வருமானத்தைக் கொண்டிருக்கக் கூடாது.*

### பராமரிப்பளிக்கும் தாத்தா பாட்டியர் நிவாரணம்

- வேலை செய்யும் தாய்மார் (திருமணமானவர்கள், விவாகரத்து பெற்றவர்கள் அல்லது கணவரை இழந்தவர்கள்), சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற தங்கள் பிள்ளைகளைக் (முந்திய ஆண்டில் 12 வயதுக்கும் குறைவான வயதுடைய பிள்ளைகள் அல்லது திருமணமாகாத இயலாமை உள்ள பிள்ளைகள்) கவனித்துக்கொள்ள பெற்றோர், தாத்தா-பாட்டி (வாழ்க்கைத்துணையின் பெற்றோர், தாத்தா-பாட்டி உள்பட) ஆகியோரின் உதவுயை நாடினால், $3,000 வரையிலான வரி நிவாரணம் பெறலாம்.

### வெளிநாட்டு இல்லப் பணிப்பெண் தீர்வை நிவாரணம்

- வேலை செய்யும் தாய்மார் (திருமணமானவர்கள், விவாகரத்து பெற்றவர்கள் அல்லது கணவரை இழந்தவர்கள்) பள்ளி செல்லும் பிள்ளைகளைக் கொண்டிருந்தால், முந்திய ஆண்டில் அவர்கள் செலுத்திய வெளிநாட்டு இல்லப் பணிப்பெண் தீர்வைத் தொகையைவிட (ஒரு வெளிநாட்டுப் பணிப்பெண்ணுக்கு) ஒரு மடங்கு வரி நிவாரணம் பெறலாம். மதிப்பீட்டு ஆண்டு 2025 முதல், வரிசெலுத்தும் அனைவருக்கும் வெளிநாட்டு இல்லப் பணிப்பெண் தீர்வை நிவாரணம் நடப்பிலிருக்காது.

**சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 356 8300**
**www.iras.gov.sg**




## ஆதரவுத் திட்டங்கள்

### குடும்பச் சேவை நிலையத்தின் குடும்பங்களை வலுப்படுத்தும் திட்டம் (FAM@FSC)

- குடும்ப அமைப்பில் மாற்றங்களைச் சந்திக்கும் குடும்பத்திற்கான ஆதரவுத் திட்டங்கள். எடுத்துக்காட்டாக, குடும்ப ஆலோசனை சேவை.
- மேலும் உதவி பெற, FAM@FSC நிலையங்களை அணுகுங்கள்.

**சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு: 6355 6388**
**www.msf.gov.sg/FAMatFSC**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# பயனுள்ள தொடர்பு எண்கள்

| | | |
|---|---|---|
| **AIC** (ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு) | 1800 650 6060 | www.aic.sg |
| **CHAS** (சமூக சுகாதார உதவித் திட்டம்) | 1800 275 2427 | www.chas.sg |
| **CPFB** (மத்திய சேம நிதிக் கழகம்) | 1800 227 1188 | www.cpf.gov.sg |
| **ECDA** (பாலர் பருவ மேம்பாட்டு அமைப்பு) | 6735 9213 | www.ecda.gov.sg |
| **HDB** (வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்)<br>• சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகள் | 6490 1111<br>1800 866 3078 | <br>www.hdb.gov.sg |
| **ICA** (குடிநுழைவு சோதனைச்சாவடி ஆணையம்) | 6391 6100 | www.ica.gov.sg |
| **IRAS** (சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்) | 1800 356 8300 | www.iras.gov.sg |
| **MINDEF** (தற்காப்பு அமைச்சு) | 1800 367 6767 | www.ns.sg |
| **MOE** (கல்வி அமைச்சு) | 6260 0777 | www.moe.edu.sg |
| **MOF** (நிதி அமைச்சு)<br>• பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டுக் குழு<br>• மற்ற ஆதரவுத் திட்டங்கள் | 1800 222 2888<br>1800 222 2888<br>1800 222 2888 | www.mof.gov.sg<br>www.gstvoucher.gov.sg<br>www.supportgowhere.gov.sg |
| **MOH** (சுகாதார அமைச்சு)<br>• கொம்கேர்<br>• கேர்ஷீல்டு லைஃப் | 6325 9220<br>1800 222 0000<br>1800 222 3399 | www.moh.gov.sg<br>www.msf.gov.sg/comcare<br>www.careshieldlife.gov.sg |
| **MOT** (போக்குவரத்து அமைச்சு) | 6270 7988 | www.mot.gov.sg |
| **MSF** (சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு)<br>• குழந்தை போனஸ் திட்டம்<br>• கொம்கேர்<br>• அரசாங்கம் பணம் தரும் விடுப்புத் திட்டங்கள் | 6355 6388<br>1800 111 2222<br>1800 222 0000<br>1800 253 4757 | www.msf.gov.sg<br>www.babybonus.msf.gov.sg<br>www.msf.gov.sg/comcare<br>www.profamilyleave.msf.gov.sg |
| **NPTD** (தேசிய மக்கள் தொகை மற்றும் திறன் பிரிவு) குடும்பங்களுக்காக அமைக்கப்பட்டது - திருமணத்திற்கும் மகப்பேற்றுக்கும் கிடைக்கும் ஆதரவின் மேலோட்டமான விவரம் | | www.madeforfamilies.gov.sg<br>www.go.gov.sg/mpbooklet |
| **எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்** | 1800 858 5885 | www.sgenable.sg |
| **SimplyGo** | 1800 225 5663 | www.simplygo.com.sg |
| **SNTC** (Special Needs Trust Company Ltd) | 6278 9598 | www.sntc.org.sg |
| **எஸ்பி குழுமம்** | 6671 7117 | www.spgroup.com.sg |

இத்தகவல் மக்கள் கழகத்தின் மக்கள் மற்றும் அரசாங்க ஈடுபாட்டுப் பிரிவால் தொகுக்கப்பட்டது.
மேல்விவரம் அறிய, தயவுசெய்து மேற்காணும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

People's Association